1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 48-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு மார்கழிமாதம் 6-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## கம்யூனிஸ்தசமய துவேஷம்

ஹங்கேரியதேசத்திலே கம்யூனிஸ்தருள் திடீரென ஓர் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. போக்குவரத்துக்குத் தங்கள் வீதிகளைத் தாமதமின்றி விசாலிக்கவேண்டுமென்று இருந்தாற்போல் அவர்களிடையே மிகுந்தகரிசனை எழுந்திருக்கிறது.

அத்தேசத்தின் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்றநகரப் பிரதான வீதிஒன்றின் அருகிலே மரியஇராக்கினி மாதாவின் அலங்காரமான ஓர் ஆலயம் உண்டு. அந்த வீதியைத்தான் விசாலிக்க வேண்டுமென்று அவர்கள் திட்டம் போட்டார்கள். மனித போக்குவரத்துக்கும், பலவின ரதங்கள் செல்வதற்கும் அந்த வீதியின் அகலம் போதாதாம். அதற்கென முந்தமுந்த அவர்கள் செய்தது இன்னதென்று தெரியுமா? மரியஇராக்கினிமாதாவின் ஆலயத்தைத் தரைமட்டமாய்த் தகர்த்தெறிந்ததுதான். ஹங்கேரியின் சகலபாகங்களிலுமுள்ள கத்தோலிக்கமக்கள் உதவிய பணங்கொண்டு அது கட்டியெழுப்பப்பட்டது. ஆனால், இதைப்பற்றிக் கம்யூனிஸ்தருக்கு யாதுமே அக்கறையில்லை. அவர்கள் கண்ணிலே அது குத்திக்கொண்டிருந்தது. இடித்துத் தகர்த்துவிட்டார்கள். ஸ்ராலினின் சிலையை அதே இடத்தில் நாட்டப்போகிறார்களாம்.

அதன்மேல் வேறும்இரண்டு வீதிகளை அகலமாக்க வேண்டுமென்றுசொல்லி. வேறும் இரு பாரிய ஆலயங்களைத் தகர்த்துவிட்டார்கள். போக்குவரத்துக்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தினால் தூண்டப்பட்டுத்தான் அவர்கள் சாத்தானுடைய இந்தநாசதொண்டைப் புரிந்தார்களா? இல்லை! இல்லை! ஆனால், ஹங்கேரியமக்களின் சமயபக்தியை வேரோடுகளைய வேண்டுமென்பதே இந்த வேதவிரோதிகளின் எண்ணமாகும்.

தங்கள் ஆட்சி "சனநாயக ஆட்சி"என்றுபொதுஉடைமைக் குழுவினர் கொட்டுமுழக்கம் செய்கிறார்கள். ஆனால், சனநாயகஆட்சியின்கீழ் இருப்பவர்கள் சமயமென்ற எதனையும் சண்டவேகத்துடன் பகைக்க வேண்டுமென அவர்கள் சனங்களுக்கெல்லாம் இடித்துரைத்து வற்புறுத்துகின்றார்கள். ஸ்ராலின் என்பவன்தானும் "கடவுள்". பொதுஉடைமை தானும் ஒருசமயம். அநேக ஆண்டுகளாக அவர்கள் இவ்வாறு போதித்துவருகின்றார்கள்.

பொய்க்குப் பிதா சாத்தானே. பொது உடைமைக்குப் பிதா காள்மாக்ஸ். இவன் பொதுஉடைமைக்கொள்கைகளையெல்லாம் ஒருகுறளில் அடக்கிவிட்டான். அது யாதெனில், "மார்க்கநெறி சனங்களை மயக்கும்அபின்" என்றான். அவனுடையசீஷன் லெனின் "வேதநெறி மானிடரைப் பித்தலாட்டம்செய்யும் ஜின்எனும் லாகிரிப் பானம்"என்றான். ஆமாம், குருவுக்குத்தகுந்த சீஷன்! இந்தப் பைத்தியகாரரைத் தொடர்ந்து வந்தவன் ஸ்ராலின். "சமயநெறியைப்பற்றிய ஒவ்வொரு கொள்கையும், தேவனைச்சார்ந்த ஒவ்வோர்சிந்தனையும் மனிதரை ஈனருள்ஈனராக்கும்" என்று ஸ்ராலின் தனதுதோழன்

மோறீஸ் மனிங்

கோர்கிக்கு எழுதினான். சோவியற் ஆட்சியின்கீழே கிடந்து நசுங்கும் எல்லாநாடுகளிலும இவன் புரிந்துவரும் அட்டூழியங்களுக்கோ அளவு கணக்கில்லை. ஆயிரமாயிரம் கிறீஸ்துவ ஆலயங்களையும், முஸ்லீம்களின் பள்ளிவாசல்களையும் பறிமுதலாக்கினான். கொள்ளை அடித்தான். பல்லாயிரக்கணக்கான வேதவிசுவாசிகளையும், குருமார், மேற்றிராணிமார், துறவிகளையும் கடுஞ்சிறையில்இட்டு வாதிக்கின்றான். இவர்களில்அநேகரைச் சித்திரவதை செய்து, கொலைப்படுத்தினான். கொலைப்படுத்திவருகின்றான். இந்தக் கொள்ளைக்காரனும், கொலைஞனும்தான் பொது உடைமைக் கட்சியினரின் "கடவுள்."

உச்சிதமான சத்திய மறை ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலே முதல்மூன்று யுகங்களிலும் இப்பேர்ப்பட்ட குரூர வேதகலாபனை நடந்திருக்குமென யான் நம்பவில்லை. ஆனால், இவன் என்ன செய்துமென்ன! குரூர வேதகலாபனை செய்து,

## இன்பமும் துன்பமும்

கடவுளுக்குப்பயந்து, அவரைப்பக்திசெய்து, அல்லும் பகலும் அவரைச்சதாவழிபட்டுப் புண்ணியபாதையில் ஒழுகிவருகிற நல்லவர்களுக்குப் பலதுன்பங்களும், சோதனைகளும், கஷ்டநஷ்டங்களும்வந்து அவர்கள் இளைத்துக்கொண்டிருப்பதும், கடவுள்ஏது? அவரைக்கண்டதேது?மோட்சமேது?நரகமேது? என்று பிதற்றியபடியே தங்கள் மனம்போனவாறு தீயவழிகளில் ஒழுகிவருகின்ற துஷ்டர்களுக்குப் பொருளின்மேல் பொருளும், சந்தோஷத்தின்மேல் சந்தோஷமும்வந்து இவர்கள் தழைத்தோங்கிச் சம்பிரமமாக வாழ்ந்துகொண்டிருப்பதும் நாம் உலகில் சாதாரணமாகக் கண்டுவரும் ஓர்காட்சி அன்றோ! இதற்குக்காரணம் என்ன? என்று பலருஞ்சிந்தித்து மனம்பேதலிக்கின்றனர். ஆனால், இதற்குக் காரணம் இல்லாமற்போகவில்லை.

கருமத்தைச்சரிவர ஊன்றிக் கவனிப்பாருக்கு இது புலப்படாமற்போகாது. "தம்மின் புதல்வர்க்கன்றோ பலகாலுஞ் சொல்வார்பயன்" என்றவாறு, தமது சொல்லைக்கேளாது பிடிவாதமாய்த் தீயசெயல்கள்புரியும்துஷ்டமக்களைப் பெற்றோர் விட்டுவிட்டு, தமக்கு ஒருவாறு கீழ்ப்படிந்து ஓரோருகால் குற்றஞ்செய்யும் நன்மக்களைஅன்றோ கண்டித்துத் தண்டித்துப் பின்னும்நல்லவர்களாக்கப் பிரயாசப்படுகிறார்கள். இவ்வாறே நமது இரக்கமுள்ள தந்தையாம் சர்வேசுரனும் தமக்குஅடங்கி நடக்கும் நல்லோர்கள் நெறிபிசகிப் போகுங்கால் அவர்களை நல்வழிக்குக்கொணர்ந்து மேன்மேலும் புனிதர்களாகச்செய்யும் நன்னோக்கத்துடன் அவர்களுக்கு அடிக்கடி கஷ்டநஷ்டம், சாவுநோவு, தரித்திரம், துன்ப வருத்தங்கள் முதலியவற்றை அனுப்புகிறார். தம்வழிநில்லாத தீயோர்களையோ ஒன்றுஞ்செய்யாது வாளாவிட்டுவிடுகின்றார். நமக்கு இவ்விஷயத்தை நன்கு விளக்கும்படியாய் நமது திவ்வியஇரட்சகர் ஓர்உவமையைத் திருவுளம்பற்றியுள்ளார். அது வருமாறு:

ஒருகுடியானவன்தனதுநிலத்தில் நற்கோதுமை விதையை விதைத்தான். ஆனால், அவன் சத்துராதிவந்து, கோதுமைநடுவில் தகரையை விதைத்துப் போயினான். ஆதலால் பயிர் வளர்ந்து கதிர்தள்ளியபோது கோதும்பைமத்தியில் தகரைச் செடிகளும் காணப்பட்டமையால், அதனைக்கண்ட அவன் ஊழியர்கள் தங்கள் எசமானனிடம்சென்று, நற்கோதுமைகளுடன் பிரயோசனமற்ற தகரையும் தழைத்தோங்கியிருக்கும்செய்தியை அவனுக்குத்தெரிவித்து, அவற்றைப் பிடுங்கி எறியலாமோ என்று கேட்க, எசமானன்: "அங்ஙனம் செய்ய வேண்டாம்; ஏனெனில், தகரைகளைப் பிடுங்குங்கால் அவற்றோடுகூட ஒருவேளை கோதும்பைகளும் வேர்பறியட்டுப்போகும்; இரண்டையும் சும்மா அறுப்புக்காலம்வரையில் வளரவிடுங்கள்,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

இதோ கிறீஸ்துசமயத்தைக் காற்றில் தூசியாய்ப் பறக்கப் பண்ணுகின்றேன்என்று ஒருகாலம் கங்கணங்கட்டிநின்ற நீரோ, டொமீசியன், தியோக்கிளேசியான் முதலியவர்கள் எங்கே? அவர்கள்போனவழியே ஸ்ராலினும் தூசியாய்,பதராய்ப் பறப்பான். பரமகடவுளுக்கு எதிராய்க் கையை உயர்த்தினவன் ஆர்தான் உய்தான்? ஆனால், சத்தியகத்தோலிக்க திருச்சபை ஒருபோதும் ஒழியப்போகிறதுமில்லை, முடியப்போகிறதுமில்லை. "அவருடைய அரசாட்சிக்கு முடிவிராது" (லூக். 1—33) "இந்தக்கல்லின்மேல் எனது சபையை ஸ்தாபித்து எழுப்புவேன். நரகத்தின்வாசல்கள் அதை மேற்கொள்ளவேமாட்டா" (மத்தேயு 16—18) எங்களைக்கொள்ளை அடிக்கலாம். கடுஞ்சிறையில்இடலாம். எங்கள் ஆலயங்களைத் தகர்க்கலாம். எங்க்ள் உயிரையுமே பறிக்கலாம். ஆனால், எங்கள்மனங்களையும், இருதயங்களையும் எவனாலுமே தகர்க்கவும் இயலாது. பறிக்கவும்இயலாது. அவைகள் நித்தியத்துக்கும் கிறீஸ்து தேவ இராசாவுக்கே உரியவை.

கிறீஸ்து தேவஇராசா என்றுமே ஜெயங்கொள்ளுவார். நித்தியத்துக்குமே அவர் அரசுபுரிவார்.

தமிழாக்கம், சூ. அ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## சோவியற் மதத்துவேஷவேலை

—நியூயோக்

முஸ்லீம்கள், பௌத்தர்கள், கிறீஸ்தவர்கள், யூதர்கள்ஆகிய மதஸ்தர்களுக்கு விரோதமான இயக்கத்தைச் சோவியற்ருஷியா தொடர்ந்து தீவிரமாக மேற்கொண்டு வருகிறதுஎன்பதை மெய்ப்பிக்கும் புதியஅத்தாட்சிகள் தற்போதுகிடைத்துள்ளன. நாடுகடத்தப்பட்ட ஊக்ரேனிய குருமார்இருவர் பின்வருமாறு கூறுகின்றனர்:—

கம்யூனிஸத்தைப் பரவச்செய்வதற்காக மதம்என்னும் ஏற்பாட்டைக் கம்யூனிஸ்தர்கள் விசித்திரமான முறையில் துர்ப்பிரயோகம் செய்கின்றார்கள். "மஸ்கோவில்இருக்கிற எங்கள்தந்தையே" என்று கைகூப்பித்தொழும்படி ருஷியமக்களுக்குப் போதிக்கப்படுகிறது. 1945-இல் ஊக்ரேனிய கத்தோலிக்கதிருச்சபை ருஷிய வைதிகதிருச்சபையோடு (கம்யூனிஸ்தஅரசியல் ஆதிக்கத்துக்குட்பட்டது) சேரவேண்டும்என்று பலவந்தஞ்செய்யப்பட்டது.

## ஸ்ராலினின் சிலைகள்

ஸ்ராலின் "எங்கள் புதியகாவலன்," "எங்கள் இரட்சகன்" என்றெல்லாம் சோவியற் பிரசாரம் நடக்கிறது. ருஷியாவிலும், அதன் சார்பு நாடுகளிலும் உள்ள ஆலயங்களிலே திருச்சின்னங்கள் வைக்கப்பெற்றிருந்த இடங்களில் ஸ்ராலினின் பிரதிமைகள் உட்கார்ந்து கொள்ளுகின்றன. "ஸ்ராலின் தெய்வத்தை"த்தொழும்படி பிள்ளைகள் பழக்கப்படுகின்றார்கள். பிள்ளைகளுக்கு என்ன தெரியும்? தொழுதுமுடிந்ததும் ஒரு ஆயாள் தோன்றி மீட்டாய்களை—குழந்தைகளின் பிரார்த்தனையைக்கேட்டு ஸ்ராலின் பிரசாதம்தருகிறார்என்ற உணர்ச்சி தோன்றுவதற்காக—வழங்குவாள். மதத்தின்பெயரால் இப்படி ஒருகம்யூனிஸ்த பிரசாரம் நடக்கிறது.

## இறைவணக்கம் கூடாது

மஸ்கோவில் இருக்கவேகூடாதென்று வெளியேற்றப்பட்ட அமெரிக்ககுரவான சங். லெபல்ட் பிறவுண் அவாகள் இவ்வாரம்வெளியான பிரபலசஞ்சிகையின் இதழ்ஒன்றிற் பின்வருமாறு எழுதுகிறார்:—

"ருஷியமக்கள் யாவரும்—அவர்கள் முஸ்லீம்களாய் இருந்தாலும்சரி, பௌத்தர்களாய் இருந்தாலும்சரி, கிறீஸ்தவர்களாய் இருந்தாலும்சரி—ஆலயந்தொழுவதைத் தடைசெய்ய விதம்விதமானபிரசார, கெடுபிடிமுறைகளை ருஷிய கம்யூனிஸ்தர்கள் கையாளுகின்றார்கள். தெய்வநம்பிக்கையே தங்கள்காரியங்களுக்குத் தடையாயிருப்பதாக அவர்கள்கருதுகிறார்கள்."

மதகுருமார்மீது "சதி" க்குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்து நூற்றுக்குத் 95 வீதம் கிறீஸ்தஆலயங்களைச் சோவியற்கம்யூனிஸ்தர்கள் அடைத்துவிட்டார்கள் என்கிறார் உலகம்சுற்றியறிந்தஅமெரிக்க நீதியரசர் வில்லியம் டக்ளஸ்அவர்கள்.

## கனடிய-அமெரிக்கஎல்லை

—வாஷிங்ரன்

புகையிரதத்தோடு சாமர்த்தியமாகக் கம்யூனிஸ்த செக்கோசிலவாகிய எல்லையைக்கடந்து, சுதந்திர ஜேர்மனிக்குள்வந்த செக்எஞ்சினியரும், அவரது உதவியாளரும் குடும்பசகிதம் இப்போது அமெரிக்காவுக்கு வந்திருக்கிறார்கள். இந்நாட்டிலே அவர்களுக்கு இருப்பிடம், வேலை கிடைக்கின்றன. காலக்கிரமத்தில் அமெரிக்கபிரசாவுரிமையும் அவர்களுக்குக்கிடைக்கும்.

3,000 மைல்நீளமுள்ள கனடிய—அமெரிக்க ஐக்கியதேச எல்லையில் முள்வேலியோ, கட்டுக்காவலோ இல்லை. இதைப்பார்த்துவிட்டு, "இம்மாதிரியே உலகெங்கும் அடைப்பில்லாத சுதந்திரநடமாட்டமும், அமைதியும் ஏற்படக்கூடாதா? அந்நாள் வரவேசெய்யும்என நம்புகிறேன்" என்றார் பரவசமடைந்த செக்எஞ்ஜினியர்.

## கமக்காரர் காணிஉரிமை

றோம், நவ. 28.

தனிப்பட்டமுறையிலோ, அல்லது கூட்டுறவு அமைப்பிலோ கமக்காரனுக்குக் காணிப்பாத்தியதை இல்லாவிடின் ஜனநாயகம் நிலைபெறஇயலாது என்று இங்கு உலகஉணவு, விவசாயஸ்தாபன மாநாட்டிலே உரைநிகழ்த்துகையில், இந்திய உணவு—விவசாய மந்திரி திரு. கே.எம். முன்ஷி அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார். உழவனுக்கு நிலம்சொந்தம்; வேளாண்மை ஜனநாயகம் இரண்டும்வளரக் கமக்காரன் திருப்தியுடன் இருக்கவேண்டும் என்ற கொள்கையைத் தன்னளவில் கடைப்பிடித்துவரும் அமெரிக்க ஐக்கியதேசம் இதே கொள்கை உலகெலாம் நிலைப்படவேண்டும்என்றே விரும்புகிறது. அது இதனைச்காக்க அறிவித்துமுள்ளது.

## தப்பியோடும் அகதிகள்

ருஷிய இரும்புத்திரை நாடுகளில் ஒன்றாகிய பல்கேரியாவிலிருந்து ஆடவரும், பெண்களும், பிள்ளைகளுமாக 1,50,000 பேருக்குமேல் இதுவரையிலே துருக்கிக்குத் தப்பியோடியிருப்பதாயும், தினமும் 400 பேர் வீதம் அங்கு இன்னமும் சென்றுகொண்டிருப்பதாயும் இஸ்தன்புல் நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. துருக்கியரின் சந்ததியாராய்ப் பல்கேரியாவில் இரண்டரை லட்சம்பேர் இருந்துவந்தார்கள். இவர்களையெல்லாம் பலவந்தமாக வெளியேற்றிவிட வேண்டுமென்று பல்கேரியஅரசாங்கம் முடிவுசெய்தமையாலே அவர்களெல்லாம் துருக்கியைநோக்கிச் சரிகின்றார்கள். துருக்கியிலே இவர்களுக்குக் கஷ்டநிவாரணம் அளிக்கும்வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. துருக்கிய அரசாங்கமும் உடைகள், போர்வைக்கம்பளங்கள், உணவுகள், மருந்துகள் ஆகியவற்றுடன் பணமாகவும் 11 லட்சம்பவுண் கொடுத்திருக்கிறது. இந்த அகதிகளில் பெரும்பான்மையினர் கமக்காரரே. அதனால் இவர்களை அங்கு திரும்பவும் குடியேற்றிவைப்பதற்காய் இலவசமாகக் காணிகளும், விதைகளும், கமஆயுதங்களும், யந்திரங்களும் உதவப்படுகின்றன.

## சூரியகிரகணம்

அடுத்தவருடம் மாசிமாதம் 25-ந்திகதி ஆபிரிக்காவைச்சேர்ந்த சூடான் நாட்டிலே ஓர் பூரணசூரிய கிரகணம் உண்டாகவிருக்கிறது. இதனை அவதானித்து ஆராய்ச்சி நடத்துதற்கென்று ஒன்பது விஞ்ஞான ஆராய்ச்சிக் கோஷ்டிகள் காட்டும்நகர்செல்லத் திட்டஞ்செய்கின்றன. இந்தநகர் கிரகணத்தின் பத்துமைல் நிழற்பாதையில் இருக்கின்றது. அந்நாட்டிலுள்ள அதிகம் பூர்வீகசாதிகள் சூரியகிரகணத்தையிட்டுப் பயப்பிராந்திகொள்ளாதபடி கிரகணப் "பெரியஇருள்"பற்றி எச்சரிக்கைகள் அனுப்பப்படும். ஆராய்ச்சிக் கோஷ்டிகளில் ஒன்று ஒற்றுவா சர்வகலாசாலையிலிருந்தும், மற்றொன்று கேம்பிறிட்ஜ் சோதிமண்டல அவதான நிலையங்களிலிருந்தும், இன்னொன்று பிரித்தானிய றோயல் சோதிமண்டல அவதானநிலையத்திலிருந்தும் செல்லும். அமெரிக்க ஐக்கிய தேசத்திலிருந்து நான்கு கோஷ்டிகள் போகும். இவற்றில் ஒன்று மூன்றுதொன் நிறையான கருவிகளுடனும் இருடகோட்டா விமானங்களுடனும் விட்டு போய்ச்சேரும்.

# சுதேசவர்த்தமானம்

## வேதசாஸ்திர பட்டங்கள்

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலிருந்து றோமாபுரிக்கு விசேஷ வேதசாஸ்திரம் கற்கப்போயிருந்த பிறதர்மார்களிலே வண. எம்.பாவிலுப்பிள்ளை பிறதரும், வண. ஸ்ரனிஸ்லாஸ் பாலசூரிய பிறதரும் வேதசாஸ்திரத்திலே B.T. எனும் பட்டமும், வண. காஸ்ரன் அல்வீனஸ் பிறதரும், வண. எம்.இராயப்பு பிறதரும் தத்துவசாஸ்திரத்தில் B.F. எனும் பட்டமும் பெற்றிருக்கிறார்களெனச் செய்தி கிடைத்திருக்கிறது.

## புதியகாரியாத்காரிப்பிரிவு

யாழ்ப்பாணம்- வலிகாமம்கிழக்குக் காரியாதிகாரியின் பிரிவு தற்போது யாழ்ப்பாணம் என்றும், கோப்பாய் என்றும் இருகாரியாதிகாரிகள் பிரிவுகளாகத்திருத்திவகுக்கப்பட்டுள்ளது. பளைக்காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை யாழ்ப்பாணக் காரியாதிகாரியாகவும், திரு. டி. டபிள்யு. செல்வரத்தினம் கோப்பாய்க் காரியாதிகாரியாகவும் பதவிஏற்றிருக்கிறார்கள். ஏனையபிரிவுகளின் காரியாதிகாரிகள் நியமனம் பின்வருமாறு: பளை—திரு. கே. பொன்னம்பலம், முல்லைத்தீவு—திரு. எக்ஸ். எம். செல்வத்தம்பு. ஊர்காவற்றுறை—திரு. எஸ். சிவஞானம். வவுனியா—எஸ். கிறீநிவாசம்.

## இந்துசாதன ஆசிரியர்

1912-ம்ஆண்டுமுதல் 1920-ம்ஆண்டுவரையிலே "இந்துசாதன" உதவிஆசிரியராகவும், அதன்மேல் அப்பத்திரிகையின் ஆசிரியராகவும் கடந்த நாற்பது ஆண்டுகளாகப் புகழ்ச்சிக்குரியவிதமாகக் கடமைபார்த்து, சிறப்பாகத் தம்சமயத்திற்கும், பொதுவாகத்தமிழ்ச்சமூகத்துக்கும் அருந்தொண்டாற்றித் தமிழுலகெங்கும் பிரஸ்தாபமாக அறியப்பெற்றிருந்தவரான பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தன் அவர்கள் சென்ற 30-ந் திகதி வெள்ளிக்கிழமை தம்பதவியிலிருந்து இளைப்பாறியிருக்கின்றார். இவரிடமாக இந்துசாதன ஆங்கில பிரசுரத்தின் ஆசிரியராகிய திரு. ஆர். என். சிவப்பிரகாசம் அவர்களே இந்துசாதன ஆசிரியராகவும் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கிறாரென அறிகின்றோம்.

## அரசாங்க சாராயவடிசாலை

சீதுவாவில் இருந்துவருகின்ற அரசாங்க சாராயவடிசாலையிலே சென்ற புரட்டாசி 30-ந்திகதியோடு முடிவான பன்னிருமாதங்களிலும் முதல்முறையாக 50,000 ரூபா ஆதாயங்கிடைத்திருக்கிறது. வருகிற பங்குனிமாத முதலோடு மூடப்படத் தீர்மானமாயிருந்த இந்தவடிசாலையிலே இன்னும் ஓர்வருடம் சாராயம் வடிக்கப்படவிருக்கிறது. அதிகமான சாராயம் வடித்துச் சாராயத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கும் கூடியவிரைவில் சாராயத்தின் விலையைக் குறைப்பதற்குமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் வடிக்குஞ் சாராயம் ஒருலட்சம் கலனிலிருந்து நான்குலட்சம் கலனுக்கப்படவிருக்கிறதகம்.

## கொலைஞனின் சங்கீதஞானம்

மன்னாரைச்சேர்ந்த காத்தான்குளத்திலே ஆர். மணி ஆசாரி எனும் ஒருவன் ஓர் கத்திகொண்டு சென்ற 28-ந்திகதி புதன்கிழமை குப்பம்மாள் என்ற தனது மனைவியைக் குற்றிக்கொன்று, அவள் பிரேதத்தின்மேல் கிடுகுகளைப் போட்டுக் குவித்து, மண்ணெண்ணெயைஊற்றித் தீ மூட்டி விட்டு, பகவத்கீதையிலுள்ள சில சுலோகங்களைப் பாடிக்கொண்டிருந்தான். இவ்விதம் மறுநாள் வியாழக்கிழமை மன்னார் நீதிபதி நடத்திய மரணவிசாரணையின் போது அறிவிக்கப்படலாயிற்று.

## சாராயத்தட்டுப்பாடு

இலங்கையிலே சாராயம்வடிக்கிறவர்கள் அடுத்தவருடம் சித்திரை மாதத்திலேயே அதாவதுவழமையிலும் ஒருமாதம்முந்தியே சாராயம்வடிப்பதைத் தொடக்கவிருக்கிறார்கள். விற்பனவிற்கும், கூடியவிரைவிலே சாராயத்தின்விலையைக் குறைப்பதற்குமாக இருப்பைஅதிகரிக்கச் செய்யும்விஷயமாய் அரசினருக்கு உதவிசெய்யும் நோக்கமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## புதிய தீபஸ்தம்பம்

கொழும்புத் துறைமுகஅபிவிர்த்தித்திட்டத்தின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டுவரும் புதியதீபஸ்தம்பம் வருகிறதைமாசஆரம்பத்தில்பூர்த்தியடையவிருக்கிறது. தீபஸ்தம்பம கண்டிச்சிற்பமாதிரியாய் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. 8லட்சம் மெழுகுவர்த்திப் பலமுள்ள இதன்தீபம் சமீபத்திலேஸ்தாபிக்கப்படும். கீழ்நாடுகளிலே அதிகம் நவீனமாதிரியான தீபஸ்தம்பங்களில் ஒன்றாகிய இதன் தீபப்பிரகாசத்தை 45 மைல்தூரத்தில் கண்டு கொள்ளலாம். இதன்ஒளிக்கதிர் கடல்மட்டத்துக்குமேல் ஏறக்குறைய 85 அடி உயரத்தில் வீசிக்கொண்டிருக்கும்.

## எஸ். எஸ். சி. பரீட்சை

தமிழ், சிங்கள, ஆங்கில எஸ். எஸ். சி. பரீட்சை சென்ற 4-ந் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கைமுழுவதிலும் 443 மத்தியதானங்களில் ஆரம்பமாகி நடந்தேறிவருகிறது. எல்லாமாகப் பரீட்சைக்குத் தோற்றியிருக்கும் 33,414 மாணவர், மாணவிகளிலே ஆங்கிலபரீட்சைக்குப் 17,941 பேரும், தமிழ்ப்பரீட்சைக்கு 1,618 பேரும், சிங்களப்பரீட்சைக்குப் 13,855பேரும் சமூகமளித்திருக்கிறார்கள்.

## முத்துச் சலாபம்

அடுத்தவருடஆரம்பத்திலே முத்துச்சலாபம்ஒன்று நடத்தப்படவிருப்பதாகக் கடற்தொழிற்தலைவர் அறிவித்திருக்கின்றார். இலங்கையிலே, கடைசியானமுத்துச்சலாபம் இற்றைக்கு 26 வருடங்களின்முன் நடத்தப்படலாயிற்று. முன்னர்சலாபத்துறைஎனும் கிராமமே முத்துச்சலாபத்துக்குத் தலைமைஸ்தானமாக இருந்தது. ஆனால், அடுத்தவருடம் மறிச்சுக்கட்டி எனும் கிராமமே தலைமைஸ்தானமாய் இருக்கும்.

## இராமநாயக நிதி

பனிப்பிட்டியா றெயில்வேஸ்ரேஷனிலே றெயின்ஒன்றால் நெரிக்கப்படவிருந்த ஓர்மாணவியைப் பாதுகாத்துவைக்க முயற்சித்தபோது அடைந்த காயங்களால் சமீபத்திலே மரணமடைந்தவரான திரு. டி. ரி. இராமநாயக என்பவரது மனைவியையும் எட்டுப்பிள்ளைகளையுங்கொண்ட குடும்பத்துக்கு உதவியாய்க் கொழும்பிலே பிரசுரமாகும் "லங்காதீப" எனும்பத்திரிகை சேர்த்துவரும்நிதிக்கு இதுவரையில் 60,000 ரூபாவுக்குமேல் சேர்ந்திருக்கிறது.

## வாழ்க்கைச் செலவு

இலங்கையிலே சென்ற கார்த்திகை மாதத்தில் வாழ்க்கைச் செலவுப்புள்ளி திரும்பவும் 284ஆக, அதாவது சென்ற மாதத்திலும் இரண்டுபுள்ளியாலே அதிகரித்திருக்கிறது. இந்தஏற்றத்துக்குக் காரணம், அரிசிப்பங்கீட்டில் அடங்காத அரிசியினதும், தேங்காய், எலுமிச்சம்பழம் என்பவற்றினதும் விலைகள் அதிகரித்தமையேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## புதியஅர்ச்சியசிஷ்டர்கள்

பரிசுத்த பாப்பரசர் சென்ற ஐப்பசிமாதம் 21-ந்திகதியன்று முத். அன்ரோனியோ மரியா ஜியானெல்லிக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளியபோது, அவருடைய எதிர்ப்பு அத்துணை பெரிதாய் இருந்தமையாலே அவர் பலமுறைகளிலும் "இரும்பு மனிதர்" எனப் பாராட்டப்பட்டு வந்ததை அத்தருணம் ஞாபகத்துக்குக்கொணர்ந்தார். அன்று இவருடன் முத். பிரான்செஸ்கோ சவேரியோ மரியா பிளாஞ்சியும், முத். இக்னேசியோ தாலாக்குனியும் அர்ச்சியசிஷ்டபட்டம்அருளப்பெற்றனர். இந்த மூவரும் 18-ம்நூற்றாண்டிலே இத்தாலியில் வசித்திருந்தனர். அர்ச். ஜியானெல்லி ஓர் மேற்றிராணியார். இவர் மரியாயின் குமாரத்திகள் கன்னிகாசபையை அடியிட்டு, ஏழைகள் பிணியாளரின் சேவைக்கெனத் தமது சீவியத்தை அர்ப்பணஞ்செய்தார். பர்ணபாஸ் சபையைச் சேர்ந்த அர்ச். பிளாஞ்சி செபத்திலும், தியானத்திலுஞ்சிறந்து "நேப்பிள்ஸின் அப்போஸ்தலர்" என அறியப்பெற்று வந்தார். அர்ச். தாலாக்குனி பிரான்சீஸ்குவின்சபை நந்தாவனத்தில் புஷ்பித்த மகாப்பிரகாசமான புஷ்பங்களில் ஒருவராய்த் தமது சீவியகாலத்திலேயே புதுமைகள் செய்யவும் வரம்பெற்றிருந்தார்.

## ஞாபகமெழுகுவர்த்தி

யுத்தத்தில்மடிந்த ஆஸ்திரியர்களின் ஞாபகார்த்தமாக வீயன்னு நகரிலே நேர்ந்துகட்டப்பெற்றுள்ள ஆலயத்தில்சென்றமாதம் 2-ந்திகதியாகிய உத்தரிப்புஸ்தலஆத்துமாக்களின் திருநாளன்று 13அடி உயரமும், 12 அங்குல குறுக்களவும், 5 அந்தர் நிறையுமுள்ள பிரமாண்டமான மெழுகுவர்த்தி ஒன்று கொளுத்திவிடப்படலாயிற்று. இந்த மெழுகுவர்த்தி 1930-ம் ஆண்டு செய்யப்பட்டது. வருடத்திலே ஆறுதினங்களில்மாத்திரம் இது கொளுத்தப்படும். அதனால் இது எரிந்துமுடிய 120 வருடங்கள் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## முஸ்லீம்களின்சாதனை

பாகிஸ்தானிலே முஸ்லீம் அரசியற்தலைவர்கள் கம்யூனிஸத்தை எதிர்த்துநடத்தும் கடைப்பிடியான போராட்டத்திலே பரிசுத்தபாப்பரசரால் கத்தோலிக்கருக்குச் சிபாரிசுசெய்யப் பட்டதுபோன்ற ஓர் முறையையே அங்கும் கமத்தொழில்நடைபெறும் பகுதிகளில் கையாடிவருகின்றார்கள். இது கம்யூனிஸ்தர்களுக்குத் தகுந்தபாடம் படிப்பிக்கக்கூடியதாய் மாத்திரமல்ல, ஆனால், கிராமவாசிகளுக்கு மிகுந்த நன்மைபயப்பதாயும் இருக்கின்றது. காணிகளைச் சமபாகமாகப் பகிர்ந்து கொடுப்பதாகிய காணிச்சீர்திருத்தமுறையே அதுவாகும். அரசாங்கம் பெருங்காணிக்காரரிடமிருந்து காணிகளைஎடுத்துக் காணிகள் இல்லாத வாரக்குடிகளுக்குப் பகிர்ந்துகொடுப்பது விஷயமாய்ச் சம்மதவாக்குக் கேட்கப்பட்டதில், முஸ்லீம் லீக்கட்சியாருள் 91 பேர் சம்மதிகாண்பித்துச் சொந்தக்காரருக்கு 25 முதல் 50 ஏக்கர் மாத்திரம்விட்டு, மீதியை வாரக்குடிகளுக்குப் பகிர்ந்துகொடுக்கவேண்டுமெனத் தீர்மானித்தனர். இந்த நடவடிக்கைக்குமாறாக 9பேரே வாக்களித்தனர்.

## முத்திப்பேறுபட்டம்

செனக்கிள்நாயகியின் கன்னிகாசபையை அடியிட்டவளும், ஓர் பிரான்சிய மாதுவுமான ஆசா. மரிய தேரேஸ் குடேர்க் அம்மாளுக்குச் சென்ற கார்த்திகைமாதம் 4-ந்திகதியன்று அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே முத்திப்பேறுபட்டம் அருளப்பட்டபோது, அங்கு 25,000 சனங்களும், 10 கருதினால்மாரும், அநேகமேற்றிராணிமாரும் சமுகமாயிருந்தார்கள். இற்றைக்கு 66 வருடங்களின்முன் பரமபதம்அடைந்த இக்கன்னிகாரத்தினத்தின் அதேசந்ததியில் உதித்த ஒருவர் சற்பிரசாதஆசீர்வாதம் அருளினார். இவர் விவியேர்ஸ்நகர் மேற்றிராணியாரான மொஞ். குடேர்க்ஆண்டவர். பிரான்சிய அரசின் அதிகாரமுறையான பிரதிநிதியும், சுகாதாரமந்திரியுமான எம். போல் றிபெய்ர்அவர்கள் தலைமையில் இத்திருப்பட்ட வைபவத்திற்குச் சமுகமளித்திருந்த பிரான்சிய யாத்திரிகர்களின் பெருங்கோஷ்டி ஒன்றுக்கு மறுநாள் பரிசுத்தபிதா பேட்டியளித்தனர்.

## பார்சலோனநகரம்

வருகிற 1952-ம்ஆண்டு வைகாசிமாதம் 27-ந்திகதி முதல் ஆனிமாசம் 1-ந்திகதி வரையிலே 35-வது சர்வதேச சற்பிரசாத மகாநாடு நடந்தேறவிருக்கின்ற ஸ்பானியதேச பார்சலோனநகர் அப்போஸ்தலர் காலமுதலே கத்தோலிக்கசரித்திரப்பெருமை வாய்ந்ததாகும். அப்போஸ்தலர்களால் அனுப்பப்பெற்ற சீஷர்களே அங்கு வேதம்போதித்தார்கள். அப்போஸ்தலர் காலமுதல் இருந்துவந்த அந்நகர் மேற்றிராணிமார்களின் நாமஅட்டவணைஒன்று அங்கே இன்றைக்கும் பாதுகாக்கப்பட்டுவருகிறது. இவர்களில் மூவர் அர்ச்சியசிஷ்டர்களாய் விளங்குகின்றனர். மூவரிலும் ஒருவர் தியோக்கிளேசியன் சக்கிரவர்த்தியின்காலத்தில் (284-305) இருந்த அர்ச். சேர்வேறுஸ். மற்றவர் 360-ம் ஆண்டுமுதல் 390-ம்ஆண்டுவரை இருந்த அர்ச். பாசியானுஸ். மற்றவர் அதன் முதல் அதிமேற்றிராணியாரான அர்ச். ஒலிகாறியுஸ். அந்நகர் ஆசனக்கோவில் ஸ்பானியகோதிக்க சிற்பத்திறமைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழுகின்றது. மேலும் "மத்தியதரைக்கடலின் இராணி" என்று பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற பார்சலோனநகர் அங்குமதிரித் தலைநகருக்கு அடுத்தபடியாக மிகவிசேஷப்பட்டது. ஸ்பெயினின்கிழக்குக்கரையிலே பிரான்சையும், ஸ்பெயினையும் பிரித்து எல்லையாகநிற்கும் பிறெனீஸ்மலைக்குத் தெற்கே சுமார் 100மைல்தூரத்திலுள்ளது. 150 விசாரணைப்பங்குகளுக்குமேல் கொண்டது. பேரான ஓர் சர்வகலாசாலைஉட்பட, எட்டுக்கத்தோலிக்க கல்லூரிகளையும், அநாதர்கள், ஏழைகள், வயோதிகர்கள், பலவீனர்கள், நோயாளிகளைவைத்துப் பராமரிக்கும் சமயஸ்தாபனங்களையும் உடையது.

## பிறங்கோவும் செபமாலையும்

ஸ்பானியதேச அரசாங்கதலைவரான ஜெனறல்பிறங்கோ அவர்கள் செபமாலைசொல்லாமல் ஒருபோதுமே படுக்கைக்குப் போவதில்லையென்று அவரின்பாரியார் அறிவித்திருக்கின்றார். பிறங்கோஅவர்கள் வெளியூருக்குச்சென்றிருக்கும்போதல்லாது மற்றப்படிதாங்கள் விவாகஞ்செய்துகொண்ட நாள்முதல் இருவரும்ஒருங்கே முழந்தாட்படியிட்டுச் செபமாலைசொல்லாமல் ஒருஇரவைத்தானும் கழியவிடவில்லையென்று ஸ்ரீமதி பிறங்கோ கூறுகின்றார். ஸ்பெயினிலே உள்நாட்டுயுத்தம் நிகழ்ந்தபோது இராவில்அதிகநேரம் வேலைசெய்யவேண்டியிருந்தபோதிலும் அதிகாலை 3 அல்லது 4 மணிக்கு எழுந்து ஜெனறல்பிறங்கோ தமதுபாரியாருடன் முழந்தாட்படியிட்டுச் செபமாலைசொல்லி வந்தார் எனச் சொல்லப்படுகிறது.

—இரும்புத்திரைநாடுகளில் ஒன்றாகிய அல்பர்னியாவிலும் வத்திக்கான் அல்பானியபாஷையிலே வானொலிமூலம் செய்திபரப்பிவருகிறது. இத்துடன் வத்திக்கான் வானொலிநிலையம் 27 பாஷைகளிலே உலகமுழுவதிலும் செய்திபரப்பிவருகின்றது.

—அமெரிக்ககடற்படை தற்போது மற்றுமோர் றொக்கெற் எனப்படும் ஆகாயபாண விமானத்தை நவமாகக் கொண்டிருக்கின்றது. இது பூமியிலிருந்து 72,000 அடிக்குமேல் உயர எழுந்திருக்கிறது. அமெரிக்கஅரசு தற்போது இத்தன்மையான மூன்றுவிமானங்களைக் கொண்டிருக்கிறது.

# மனிதர் தங்கள் பாவங்க...

ஸ்ரனிஸ்லாஸ்என்ற குருவானவர் அர்ச். சாமிநாதர்சபையைச் சேர்ந்தவர். ஒருநாள்மாலை அவர் தோட்டத்தில் உலாவிச் செபமாலை செபித்துக்கொண்டிருந்தார். யாரோசத்தமாய்ப் பெருமூச்சுவிடுவிதும், அழுவதும் அவர்செவிகளில் விழுந்தன. திரும்பிப்பார்த்தார், ஒருவரையும் காணோம். "இவ்வளவுசத்தமாய் இங்கு அழுகிறதுயார்? நான் ஏதாவதுஉதவி செய்யக்கூடுமா?" எனக்கேட்டார். ஒன்றும் பதிலில்லை. ஆனால், அழுகைக்குரல் திரும்பவும் கேட்டது. தமது செபத்தைக் கெடுக்கப் பிசாசுசெய்யும் தந்திரமாக்கும் இது எனக் குருவானவர் நினைந்து, சிலுவைஅடையாளம் வரைந்து, 'யேசுக்கிறீஸ்துநாதர் பேரால் உனக்குக் கட்டளையிடுகிறேன், நீ யார் என்றுசொல்' என்றார்.

"நான் உத்தரிக்கிறஸ்தலத்திலிருந்து வந்திருக்கும் ஓர்ஆத்துமம். என்பாவங்களுக்காக நான் அகோரநெருப்பில் உத்தரிக்கவேண்டியிருக்கிறது. பயங்கரத்துக்குரிய வேதனைப்படுகிறேன். ஓ, மறுஉலகில் பாவங்கள் எவ்வளவு கடுமையாகத் தண்டிக்கப்படுகின்றனஎன்று மனிதர் அறிவார்களானால், தங்கள்ஆசாபாசங்களை அடக்கவும், ஆத்துமத்தை விழுத்தாட்ட முயற்சிக்கும் பிசாசின்வலைகளையும்,உலகசிற்றின்பங்களையும் விலக்கிநடக்கவும் எவ்வளவோ பிரயாசப்படுவார்கள்! நீங்கள்போகும்இடமெல்லாம் மக்களுக்கு அறிவிக்கும்படி பின்வரும்செய்தியை உங்களுக்குச்சொல்லும்படி சர்வவல்லபகடவுள் எனக்குக் கட்டளையிடுகிறார். இவ்வுலகில் கட்டிக்கொள்ளப்படும் மிகச்சிறு பாவமும் மறுவுலகில் மிக்ககடுமையாகத் தண்டிக்கப்படுகிறது. ஆத்துமம் தனதுபொய்ச்சிநேகிதரான ஆசாபாசங்களுக்காகக் கொடியவேதனைப்படும்" என அந்தஆத்துமம் கூறியது.

"நாங்கள்படும் வேதனைகளின் ஒருபகுதியைமுதலாய்எந்தமனிதனும் சகிக்கமுடியாது. இது உங்கள்மனதில் நன்குபதியவேண்டும். கையைநீட்டுங்கள். உத்தரிக்கிறஸ்தல நெருப்பினின்று தப்பிக்கொள்ளும்படி இனிமேலாக உங்களால்ஆனதெல்லாம் செய்வீர்கள்என்பது நிச்சயம்" என அந்தஆத்துமம் கூறியது. குருவானவர் அச்சமின்றிக் கையைநீட்டினர். நெருப்பின் வியர்வைத்துளி ஒன்று அவர் கரத்தில் விழுந்தது. ஸ்ரனிஸ்லாஸ்சுவாமியார் பயங்கரகூக்குரலிட்டுக் கீழேவிழுந்தார். அவருடையசத்தத்தைக்கேட்டு, ஆட்கள்உதவிக்குவந்தனர். பலவழிவகைகளைக்கையாடி அவரை உணர்ச்சிபெறச்செய்தனர். அவருடைய கையில் இருந்த காயத்தின் காரணத்தைக்கேட்க,அவர்நடந்ததைத்தெரிவித்து, மனிதர் தங்கள்பாவங்களுக்காக மறுஉலகில் அனுபவிக்கவேண்டியிருக்கும் கொடியவேதனைகளை உலகெங்கும் அறிவிக்கும்படி அவர்களைக்கேட்டுக்கொண்டார்.

இந்தச்சம்பவத்துக்குப்பின் அவர் ஒருவருடம்மாத்திரம்உயிர் வாழ்ந்தார். அந்தக்காயத்தினால் இடைவிடாதவேதனை அவர் அனுபவித்தார். சாகக்கிடக்கையில் குருமாரும், துணைச்சகோதரரும் அவரைச்சுற்றிநிற்க, பாவிகளுக்குக் கடவுள் மறுஉலகில் வைத்திருக்கும் கொடியவேதனைகளை அவர் இன்னொருமுறை விபரித்துக்கூறி, எல்லோரும் தபவாழ்க்கை நடத்தவேண்டும், கடவுளுடைய வரப்பிரசாத உதவியைக்கொண்டு ஆசாபாசங்களை அடக்கவேண்டுமென்றுபுத்திசொல்லிஉயிர்விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

மார்கழிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 7 | அ. அமிர்தநாதர் | (வெ) |
| சனி | 8 | தேவமாதா சென்மபாவமில்லாமல் உற்பவி. திரு. | (வெ) |
| ஞா | 9 | ஆகமனகா. 2-ம்ஞாயிறு — திருக்குடும்பமனே சம்மன. இத்தா. கொண்டுபோகப். | (ஊ) |
| திங் | 10 | அ. மெல்கியாதப்பர் | (வெ) |
| செ | 11 | அ. தமாசியார் | (வெ) |
| புத | 12 | அ. எப்பிமக்கியார் | (வெ) |
| வி | 13 | அ. பிரகாசியம்மாள் | (சி) |
| வெ | 14 | அ. ஸ்பிரிதியோன் | (வெ) |

சத்தியவேத

பாதுகாவலன்

1951-ம் ஆண்டு

மார்கழிமாதம் 6-ந்திகதி

## ஆகமன காலம்

ஆகமன காலமென்பது இருளிலிருந்துகொண்டு வெளிச்சத்தை எதிர்பார்க்கும் காலம். தேவ வார்த்தையானவர் உலகத்திலே மனிதாவதாரம் செய்த நாளை உத்தமவிதமாய்க் கொண்டாடுமுன் செபத்தாலும், தபத்தாலும் ஆயத்தஞ்செய்யும்படி திருச்சபை நம்மைத் தூண்டுகிறது. இவ்வாறு ஆயத்தஞ் செய்யும் காலத்திற்குத்தான "ஆகமனகாலம்," அதாவது "வருகையின்காலம்" என்று பெயர்.

வாக்குத்தத்தம் செய்யப்பெற்ற மெசியாவின்வருகைக்காகத் தேவப்பிரசைகள் பல்லாயிரம்வருடங்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். அவர்வராமல் உலகம் வரட்சியுற்று, இருளின்குருட்டாட்டத்திலும், மரணநிழலிலும் கிடந்துஉழன்றது. சீயோனின் அழுகைக் கூக்குரலும், அதன் நிர்ப்பாக்கிய அலறலும் பரிதாபகரமாய் இருந்தன. மனுக்குலம் கடவுளைவிட்டகன்று பாவச்சேற்றில் ஆழ்ந்து கிடந்ததை நினைத்து இசையாஸ்தீர்க்கதரிசி புலம்புவதைக் கேட்டு உருகாதார்யார்?

உலகசரிதை இவ்வாறிருக்க, இரக்கமுள்ளசர்வேசுரன் சீனாய் மலைமீது தம்முடையஏற்பாட்டின் சட்டத்தைக் கொடுக்கவருமுன் இஸ்ராயேலரைப் பரிசுத்தப்படுத்த மோயீசனை அனுப்பியதுபோல இப்பொழுதும் வெகு காலமாய்த் தொடர்ச்சியாகப் பிதாப்பிதாக்களையும், தீர்க்கதரிசிகளையும் அவர்களிடையே தோன்றச்செய்து, வாக்குத்தத்தம் செய்யப்பெற்ற புதிய ஏற்பாட்டின் மெசியர்மேல் நம்பிக்கையை உறுதிப்படுத்திவந்தார்.

இவ்வாறு ஆயிரக்கணக்கான வருடங்களாக உலகத்தை ஆயத்தஞ்செய்யச் சர்வேசுரன் திருவுளமானது ஏன்? மனுக்குலம் தான் கட்டிக்கொண்ட பாவத்தின் கொடுமையையும், அதனால் தனக்குற்ற துன்பங்களையும், கடவுளின் அருள் இன்றெனில் தனக்குஏற்படக்கூடிய கதியையும்நன்றாகஉணரவேண்டுமென்றும், இவற்றினின்றும் மீட்புஅடைவதற்காக வாக்குத்தத்தமபண்ணப்பெற்ற இரட்சகர்பேரிலுள்ள நம்பிக்கை உறுதியடையவேண்டுமென்றும் சர்வேசுரன் சித்தமானார்.

தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின. தெரிந்துகொள்ளப்பட்ட சனங்களின் உரிமையையும், ஆட்சியையும், உரோமையர் கைப்பற்றினர். யூதாவின்சந்ததியாரது ஆட்சிவீழ்ந்தது. மெசியாவும் வரக்காலமாயிற்று. சர்வலோகமும், விசேஷமாக யூதர்களும் அவரது வருகைக்காகப் பெருங்கவலையோடு எதிர்பார்த்துநிற்கின்றனர். வானங்கள் நீதிபரனைவழங்குகின்றன. பூமியும் உதரந்திறந்து உலக இரட்சகரைப் பிறப்பித்தது. மனுக்குலத்தின் இரட்சணியத்திற்காக மெசியாஸ் தோன்றிய மகாசம்பவத்தை வருடந்தோறும் கொண்டாடுகிற விசுவாசிகளும் ஒருசிறுஅளவிலாவது தங்கள்முன்னோர்களைப்போல மிக்க ஆவலுடன் அவரதுவருகைக்காக எதிர்பார்த்துத் தக்கவிதமாய் அதற்கு ஆயத்தம்செய்ய வேண்டுமென்று திருச்சபை போதிக்கின்றது. கருணை நிறைந்த ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி, உலக முடிவில் மகிமையோடு அவரிடம்போய் அவரோடு ஐக்கியமாவதில்தான் ஆகமனகாலத்தின் கருத்தெல்லாம் அடங்கியிருக்கிறது. செபம், சுயபரித்தியாகம் முதலியவற்றைப்பயின்று இவற்றிற்கு ஆதாரமாகத் திவ்வியபலிபூசையை அனுதினமும் ஒப்புக்கொடுப்பது மற்றெல்லா ஞானமுயற்சிகளிலும் சிறந்ததாகும்.

இந்த ஆகமனகாலத்தைக் கொண்டாடும வழக்கம் நான்காவது நூற்றாண்டிலே இருந்தது. கர்த்தரின்வருகையைத் தேவப்பிரசைகள் நாலாயிரவருடகாலம் எதிர்பார்த்திருந்ததின் ஞாபகமாக ஆகமன காலத்திற்கு நான்கு வாரங்களைத் திருச்சபை ஏற்படுத்தியிருக்கிறது. ஏழாம்நூற்றாண்டில் இக்காலம் 'கர்த்தர்பிறப்பின் தபசுகாலம்' என்று அழைக்கப்பட்டு வந்தது. அக்காலத்திலே கிறீஸ்தவர்கள் ஒவ்வொருவரும் ஒருசந்தி அனுசரித்தனர். கோவிலிலே சுரூபங்கள் துக்கத்தின் அடையாளமாக மறைக்கப்பட்டு வந்தன. இதனைத் திருச்சபை கடனாகக்கற்பிக்கவில்லை. ஆயினும் தபத்தின் அறிகுறியாக இக்காலத்தில் கலியாணம் முதலிய மங்கல வைபவங்களை விலக்கியும், கோவில்களிலே திருநாட்களின் சந்தோஷகரமான கீதங்களை நிறுத்தியும், குருமார் ஊதாக்களையணிந்து திவ்விய பூசை செய்ய வேண்டுமென ஒழுங்குபடுத்தியும் இருக்கின்றது. அதனால் நாம் இந்தஆகமனகாலத்திலே செபதபத்தாலும், ஒறுத்தல் பரித்தியாகத்தாலும், பச்சாத்தாபத்தாலும் நம்மையும் தேவபாலனின் வருகைக்கு ஆயத்தஞ் செய்வோமாக!

—இந்தியாவின் அதிகம்கொழுத்த மனிதர் திரு. நத்துலால் பார்கவ என்பவரேயாம். இவர்நெடுங்காலம் 510 ருத்தல் நிறையுடையவராயிருந்து சுகக்குறைவுகாரணமாகக் கடந்தஇருவருடங்களிலும் 15 ருத்தலைஇழந்து தற்போது 495 ருத்தல் நிறையுடையவராக இருக்கின்றார்.

## ஆகமனகாலத்தின்
## 2-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(மத். 11 : 2—10)

அக்காலத்தில் அருளப்பர் சிறைச்சாலையிலிருக்கையில் கிறீஸ்துநாதருடைய கிரியைகளைக் கேள்விப்பட்டுத் தம்முடைய சீஷரில் இருவரைஅனுப்பி வரவிருக்கிறவர் நீர்தாமோ அல்லது வேறொருவரை எதிர்பார்ப்போமோவென்று அவரைக் கேட்கச்சொன்னார். அதற்கு மறுமொழியாக யேசுநாதர் அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: நீங்கள்போய்க் கேட்டவைகளையுங் கண்டவைகளையும் அருளப்பருக்குஅறிவியுங்கள். குருடர் காண்கிறார்கள், முடவர் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சொஸ்தமாக்கப்படுகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் உயிர்த்தெழுகிறார்கள், ஏழைகளுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்றது. ஆயினும் என்னிடத்தில் இடறல்படாதவன் பாக்கியவானென்றார். அவர்கள்புறப்பட்டுப்போனபின்பு யேசுநாதர் சனக்கும்பலைநோக்கி அருளப்பரைக்குறித்து வசனிக்கத் தொடங்கினதாவது: வனாந்தரத்தில் எதைப்பார்க்கப் போனீர்கள்? காற்றினால் அலக்கழிக்கப்பட்ட நாணலையோ? பின்னும் எதைப்பாக்கப்போனீர்கள்? மெல்லியஉடைகளை உடுத்தியிருக்கிறவர்சள் அரசர்மாளிகைகளில் இருக்கிறார்கள். பின்னும்எதைப்பார்க்கப் போனீர்கள்? ஓர்தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியிலும் மேலானவரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், அவரைக்குறித்தே இதோ! உமக்குமுன்பாக உமதுவழியை முஸ்திப்புச்செய்யும் எம்தூதனை உமதுசமுகத்துக்குமுன் அனுப்புகிறோமென்று வசனிக்கப்பட்டதுஎன்று திருவுளம்பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சுதேச வர்த்தமானம்

### மல்லாக நீதிஸ்தலம்

மல்லாக நீதிஸ்தலத்தின் புதியகட்டடத்தை நாளை 7-ந் திகதி வெள்ளிக்கிழமை நீதிமந்திரியார் திறந்துவைப்பார். இப்புதியகட்டடம் சகலவசதிகளும்அமைய நல்லமாதிரியாய்க் கட்டப்பட்டுள்ளது. இதன் ஓர்பகுதியில் நீதிபதியின்பங்களா அமைக்கப்பட்டிருக்கிறது. பழைய நீதிஸ்தல கட்டடம் இடிக்கப்பட்டுவிட்டது. புதியகட்டடம் திறக்கப்பட்டபின் தற்போது விசாரணை நடைபெற்றுவரும் பழையகாரியாலயமும் இடிக்கப்படும்.

### நத்தார்ச்சோபன கடிதங்கள்

நத்தார்ப்பண்டிகைச் சோபனங்கள் தெரிவித்து அனுப்புங்கடிதங்களின் மேலுறைகளின்மேல் "நத்தார்ச் சோபனசெய்தி"என்று குறிப்பிட்டுக் கூடியசெதியிலே தபாற்கட்டுக்குப் போட்டால் அவைகளை உரியகாலத்தில் விலாசகாரரிடம் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகளைப் பிரதமதபாற்கந்தோர்அதிபர் செய்திருக்கின்றார்.

### லெக்கோக் ஞாபகசின்னம்

பெரியகல்விமானாய், சிறந்தவிஞ்ஞானியாய், கொழும்பு, சென் யோசெவ் கல்லூரியின் தலைவராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற அதி வண. எம். ஜே. லெக்கொக்சுவாமிகளின் ஞாபகார்த்த சின்னம் அமைக்கும்வேலை இம்மாசத்தில் ஆரம்பிக்கப்படும். இதற்கென டாளிவீதி — மக்கலம்வீதிச் சந்தியிலுள்ள ஓர்காணித்துண்டு வாங்கப்பட்டுள்ளது. இந்தவேலையைச் செய்து முடிப்பதற்கெனச் சேர் ஜெருட்விஜயக்கூன் (செனற்சபைத்தலைவர்) டக்றர் எல். ஏ. இராசபக்ஷ (நீதிமந்திரியார்) ஜனாப்அமின் டிடி (மாலைதீவுப்பிரதிநிதி) டக்றர் டபிள்யு. பாலேந்திராஎன்பவர்கள் ஓர்கம்மிற்றியாக நியமனஞ்செய்யப் பெற்றுள்ளனர். சென்யோசெவ் கல்லூரிப் பழையமாணவர்சங்கம் இவர்களுக்குவேண்டிய உதவிசெய்யும்.

### யாழ்ப்பாண நகரசபை

யாழ்ப்பாண நகரசபைப் பொதுத்தேர்தல் சென்றசனிக்கிழமை நடைபெற்றது. அதிலே பதினைந்துவட்டாரங்களுக்கும் அங்கத்தவர்கள் பின்வருமாறு தெரியப்பட்டிருக்கின்றார்கள்.

1. திரு. அல்பிறெட்சுவாம்பிள்ளை
2. ,, பி. எம். யோண
3. ,, ஜி. நல்லையா
4. ,, ஏ. ரி. துரையப்பா
5. ,, பி. காசிப்பிள்ளை
6. ,, கே. குகதாசன்
7. ,, கே. துரைசிங்கம்
8. ,, ஏ. துரைசிங்கம்
9. ,, எஸ். எஸ். நவரத்தினம்
10. ,, ரி. எஸ். துரைராசா
11. ஜனாப் எம். எம். அபுசாலி ஹாஜியார்
12. ,, எம். எம். சுல்தான்
13. ,, சாம். ஏ. சபாபதி
14. ,, ஆர். சி. மன்மதராயன்
15. ,, ஏ. ஜே. சுவாம்பிள்ளை

இந்தத்தேர்தல் விஷயமாய்க் கவனிக்கத்தக்கவை வருமாறு:—

1-ம் வட்டாரம் திரு. அல்பிறெட் சுவாம்பிள்ளைஅவர்களில் தொடங்கி 15-ம் வட்டாரம் திரு. ஏ. ஜே. சுவாம்பிள்ளை அவர்களில முடிவாகியிருக்கிறது.

தற்போதைய நகரசபையில் அங்கத்தவராயிருந்து திரும்பவும் அபேட்சகர்களாக முற்பட்டவர்களிலே திரு. ஏ. எம். புறுடி, ஜனாப் அப்துல்காதர், திரு. எஸ். விசுவலிங்கம் எனும்மூவரும தேர்தலிலேதோல்வியுற்றுத் தங்கள் ஸ்தானங்களை இழந்தனர்.

திரு. பி. எம். ஜோண், சாம். ஏ. சபாபதி, எஸ். எஸ். நவரத்தினம், பி. காசிப்பிள்ளை ரி. எஸ். துரைராசா எனும் ஐவரும்வெற்றிபெற்றுத் திரும்பவும் தங்கள் ஸ்தானங்களை வகித்துக் கொண்டனர்.

மேயர் சி. பொன்னம்பலம், திரு. ஆர். ஆர். நல்லையா, டி. ஜேம்ஸ், ஜே. செபஸ்தியாம்பிள்ளை, ஈ. ரி. ஹிச்கொக், உபமேயர் எஸ். ஆர். தனைய சிங்கம்என்பவர்கள் தேர்தலுக்குமுன் வராது விலகிக்கொண்டனர்.

### வைசூரிநோய்

திரிகோணமலைப்பிரிவிலே சாம்பல் தீவைச்சேர்ந்த சல்லிஎனுமிடத்திலும் வல்வெட்டித்துறையிலுள்ள ஆதிகோவிலடியிலும் அம்மைநோய் தலைகாட்டியுள்ளது. வெளிநாட்டிலிருந்து வந்தவர்களாலேயே இருஇடங்களிலும் இந்தநோய்தோன்றியதாகத் தெரியவருசிறது.

### வடமாகாண ஏசன்றர்

வடமாகாண ஏசன்றராயிருந்து லீவிலே பிரித்தானியதேசஞ் சென்றிருந்தவரான திரு. பி. ஜே. ஹட்சன் அவர்கள் மறுபடியும் கொழும்புவந்து சேர்ந்துவிட்டார். இவர்செய்துகொண்ட விசேஷவேண்டுகோளின் பேரில் திரும்பவும்இவர் வடமாகாண ஏசன்றராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறாரெனவும், தற்போதுவட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணஏசன்றாக இருந்துவருகிற திரு. பி. ஓ. பெர்னண்டோ அவர்கள் கவுண்மேந்துஏசன்றாக மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டிருக்கிறுரெனவும் தெரியவருகிறது.

## . ஸ்ரீ வ. சந்தியாப்பிள்ளை உபதேசியாரின் தேகவியோகம்

அச்சுவேலிப்பதி வாசராய், பலராலும் நன்குமதிக்கப் பெற்றவராய், ஓர் உத்தம கத்தோலிக்க பத்திமானுய், உண்மையான கிறீஸ்தவசீவியத்துக்கு ஓர்கண்ணுடிபோன்றவராய், காலங்கண்ட ஓர்பெரியமனுஷராய், தாழ்மை, தயை, இன்சொல்ஆதியாம் நற்குணசீலராய் விளங்கியிருந்தவரான ஸ்ரீ வ. சந்தியாப்பிள்ளைஉபதேசியார் விருத்தாப்பியநோய்கண்டு சென்ற 1-ந்திகதி சனிக்கிழமை கொழும்பிலே தமது புதல்வரின் இல்லத்தில் காலஞ்சென்ருரெனும் துயரசெய்தி அறிந்து பெரிதும் மனவருத்தமுற்ருேம். இவர் அச்சுவேலியிலே பிரபலஉடையாராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீசவிரிமுத்து வயித்தியாம்பிள்ளை அவர்களின்புதல்வர். அச்சுவேலிஉடையாராய் நெடுங்காலம் பெருமையுடன் கடமைபார்த்துவந்து தற்போது இளைப்பாறியிருப்பவரான ஸ்ரீ வ. சின்னப்புஅவர்களின் சகோதரர். இளமையிலேஇவர் தமதுதந்தையாரின் தோட்டங்கள், ஆடுமாடுகளைப் பார்த்துக் கமத்தொழிலில் ஈடுபட்டிருந்தார். அந்நாளிலே நல்லூர் வண. சுவாமி. ஞானப்பிரகாசர்அவர்களுடன் ஊடாடியகாரணமாக இவர் வேதநூல்களை நன்குவாசித்து, தேவபத்தியிலும், வேதானுசாரத்திலும் கதித்து,உபதேசியாராய் இருந்துவரும் நாளில் எத்தனையோபேரை நல்வழிப்படுத்தி யிருந்தார். செபமாலையும் கையுமாகவே இவர் அதிகமாகக்காணப்படுவார். ஞானவாசினையிலும், வேதசம்பந்தமான சம்பாஷணையிலும் என்றைக்கும் கருத்தாயிருப்பார். உபதேசிவேலையுடன் உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்கள்பூசைக்குக் காசுசேர்த்தும், தமதுவரும்படிகளில் சிலவற்றை அதற்கெனக்கொடுத்தும ஆத்துமாக்கள்பக்தியைப் பரப்பிவந்தார். செபமாலைமாதாவில் மிக்கானபக்தி கொண்டிருந்த இவர் எத்தனையோமுறைகளில்அத்திருநாயகியின் சலிகையால் அதிசயத்துக்குரியவிதமாய்க் காப்பாற்றப்பட்டும, அற்புதவிதமாகக் குணமாக்கப்பட்டு மிருக்கின்றுர். இவர் திருச்சபைக்கு என்றும்பிரமாணிக்கமாய், மேற்றிராணிமார், குருமாருக்குச் செய்யவேண்டிய பணிகளிலும், காண்பிக்கவேண்டிய வணக்கத்திலும் ஒருபோதுமேகுறைவுபடாதவராய், எவர்க்குமே ஓர்தந்தையாய், அன்பராய், நடந்துகொண்டுவந்தாராகலின் இவரை எல்லோருமே நேசித்தும் சங்கித்தும் வரலாயினர். அச்சுவேலி தற்போது அடைந்துள்ள வைதிக, லௌகிக சிறப்புகளுக்கு இவரது அயராப்பணியும், சலியாச்செபமும் ஓரளவில் காரணமென்ருல் மிகையாகாது. இவர் சீவந்தராயிருந்தகாலத்திலே "உபதேசியார் சந்தியாப்பிள்ளை தற்சரிதை" எனும் மகுடநாமத்துடன் அபிமானி ஒருவர் இவருடைய வாழ்க்கை வரலாற்றை அழகாகஎழுதுவித்து அச்சேற்றியிருக்கிறுரென்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது. இவருடைய மரணத்தாலே அச்சுவேலி தனது கத்தோலிக்கபெரியார் ஒருவரை இழந்து சந்தாபிக்கின்றது. இவரதுஆன்மா சாந்தியடைவதாக!

—ஸ்பானியதேச அலிக்கான்ரே நகரில் ஓர் சிறுமியின் சுவாசப்பையுள் இருந்த குண்டூசி ஒன்றை அங்குள்ள டக்றர் ஜுவான் லோப்பெஸ் என்பார் சத்திரவைத்தியஞ்செய்யாமலே வெளியில் எடுத்துவிட்டிருக்கின்றுர். சிறுமியின் சுவாசப்பையில் இருந்த குண்டூசியை அதுபோனவழியால் திருப்பவரச்செய்து அவளின் வாய்வழியாக வெளியிலே கொண்டுவந்துவிட்டார்.

*************************

## சந்தாதாரருக்கு ஓர் வேண்டுகோள்

"சத்தியவேதபாதுகாவலன்" சந்தாதாரருக்கு 1951-ம் ஆண்டு முடிகிறவரையிலே அவரவர் நிலுவைப் பணத்தைப் பற்றிய அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தும் சிலர் அதைப்பற்றி இன்னுமேகவனியாமல் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் நிலுவைப்பணத்தைத் தாமதமில்லாது அனுப்பிவைக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேம். 1952-ம் ஆண்டுச் சந்தாப்பணத்தையும் அடுத்த பங்குனிமாதம் 31-ந் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறு எல்லோரும் கேட்கப்படுகின்றுர்கள். பணம் அனுப்பும்போது தங்கள் சந்தா நம்பரையும் குறித்து அனுப்புக.

*************************

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைகளின் முதலாந் தவணை **8-1-1952**-இல் ஆரம்பமாகும. பாடசாலைத் தவணைகளும், பகிரங்கவிடுமுறைநாட்களும் பின்பு பிரசுரிக்கப்படும்.

1952-ம் ஆண்டு தத்தம் பாடசாலைகளில் அனுசரிக்கப் படவிருக்கும் விசேஷ விடுமுறை நாட்களை நமக்குத் தெரிவிக்கும்படி தலைமை ஆசிரியர் எல்லோருங் கேட்டுக்கொள்ளப் படுகிறுர்கள்.

N.B. கொழும்புத்துறைத் தாபனத்தில் வழமையாக மார்கழிமாதம் நடைபெறும். ஆசிரியரின் ஞானவொடுக்கம் வருகிற சித்திரைமாதத்துக்குப் பின்போடப்பட்டிருக்கிறது.

**T. A. J. Mathuranayagam**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 4-12-51.

## வறியவர்களுக்கு உதவியாக நத்தார்விழா விற்பனவு

நத்தார் விழாக் காலத்திலே வறியவர்களுக்குத் தருமம் வழங்குதற்குச் சகாயமாய்ச் சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் வருகிற மார்கழி மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் தினமும் காலை 9 மணிக்கும், மாலை 6 மணிக்குமிடையில் ஓர் விற்பனவு நடந்தேறும்.

அவரவர் இயல்புக்குத் தகுந்த விதமாய் வாங்கக்கூடியதாக உபயோகமுள்ள உடுப்புவகைகளும், வீட்டுப்புடவைகளும் அதிகம் நியாயமான விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். தயவுசெய்து சமுகங்கொடுத்து ஏதோ சில வாங்கி அத்தாலே நத்தார்விழாக் காலத்திலே வறியவர்களின் கஷ்டங்களைப் போக்க மனமுவந்து ஒத்தாசை செய்யுங்கள்.

மரக்கறிவகைகளும், தேங்காய்வகைகளும், மற்றும் தேவைக்கு அவசியமான பொருட்களும் நியாயமான விலையில் விற்கப்படும்.

## விசுவாசப் பரப்புதற்சபை சேகரிக்கப்பெற்ற பணம்

| விசாரணைப்பங்குகள் | சேர்ந்த பணம் | அங்கத்தவர்கள் | பாடசாலைகள் | |
|---|---|---|---|---|
| | ரூ.—ச. | ரூ.—ச. | ரூ.—ச. | |
| அனுராசபுரம் | 60-00 | — | 40-00 | அர்ச். சூசையப்பர்கல்லூரி |
| | | | 200-00 | திருக்குடும்பமடம் |
| அச்சுவேலி | 40-00 | 3-00 | 3-00 | அச்சுவேலி வடக்கு |
| | | | 8-10 | ,, மடம் |
| ஏழாலை | 45-00 | 10-50 | 12-00 | ஏழாலைப் பாடசாலை |
| | | | 10-00 | கொட்டகப்புலப் பாட. |
| | | | 12-00 | வசாவிளான் ,, |
| ஆனைக்கோட்டை | 56-98 | 36-00 | -80 | மானிப்பாய்ப் ,, |
| | | | 3-25 | நவாலிப் ,, |
| அரிப்பு | 16-84 | — | 17-27 | |
| அலகலாவா | 11-72 | — | — | |
| சுன்னுகம் | 22-40 | — | — | |
| ஆசனக்கோவில் | 112-28 | — | 300-00 | திருக்குடும்பமடம், ஆங்.பா. |
| | | | 235-00 | ,, தமிழ்ப்பாடசாலை |
| | | | 51-50 | சென்சாள்ஸ் பாடசாலை |
| | | | 125-00 | சம்பத்திரிசியார்கல்லூரி |
| | | | 115-76 | அர்ச்.சூசையப்பர்தாபனம் கொழும்புத்துறை |
| நெடுந்தீவு | 12-60 | 21-00 | 16-00 | மடத்துப் பாடசாலை |
| | | | 8-12 | நடுக்குறிச்சி ஆண்பாடசா. |
| திருச்சிலுவைக்கன்னியர்கள்—ஆஸ்பத்திரி | 50-00 | — | — | |
| இளவாலை | 130-64 | 199-25 | 212-00 | திருக்குடும்பமடம் |
| | | | 200-00 | சென்: என்றீஸ்கல்லூரி |
| கரம்பன் | 99-18 | 21-00 | 55-95 | கரம்பன் பாடசாலைகள் |
| ஊர்காவற்றுறை | 71-00 | 25-50 | 26-00 | சென்மேரீஸ் பாடசாலை |
| எழுவைதீவு | 8-00 | — | — | |
| சந்தியோகுமையோர் கரையூர் | 75-50 | — | 110-00 | பெண்பாடசாலை |
| | | | 56-00 | ஆண் ,, |
| மயிலிட்டி | 47-25 | 18-25 | 17-75 | |
| மருதமடு | 190-52 | — | — | |
| முல்லைத்தீவு | | 6-00 | 6-00 | |
| மாதகல் | 45-00 | 23-00 | 30-00 | பெண்பாடசாலை |
| | | | 20-30 | ஆண்பாடசாலை |
| முருங்கன் | 6-10 | 9-00 | 6-50 | |
| மன்னுர் | 359-73 | — | 65-00 | ஆண்பாடசாலை |
| தாழ்வுபாடு | 43-50 | — | 165-00 | பெண் பாடசாலை |
| நானுட்டான் | 14-29 | — | 9-07 | |
| வஞ்சியன்குளம் | 18-51 | — | — | |
| நாரந்தனை | 26-29 | 25-50 | 120-00 | |
| புங்குடுதீவு | 26-14 | — | — | |
| பண்டத்தரிப்பு | 49-59 | 33-60 | 3-00 | |
| பாஷையூர் | 97-14 | — | 110-44 | |
| புதுக்குடியிருப்பு | 6-55 | 6-00 | 11-00 | |
| பள்ளிமுனை | 42-78 | 16-00 | 37-00 | |
| பருத்தித்துறை | 84-60 | 33-00 | 38-23 | |
| அடைக்கலமாதா கோவில் | 48-08 | 89-50 | 40-00 | |
| சில்லாலை | 31-05 | 329-03 | 10-50 | ஆண்பாடசாலை |
| | | | 16-50 | பெண்பாடசாலை |
| தோலகட்டி ஆச்சிரம. | 25-00 | — | — | |
| உயிலங்குளம் | 1-00 | 6-00 | 17-50 | உ. கு. பாடசாலை |
| | | | 12-48 | மாவிலங்கேணி பாடசாலை |
| ஊறணி | 9-40 | 149-50 | 8-50 | |
| வங்காலை | 190-26 | 14-00 | 12-06 | ஆண்பாடசாலை |
| | | | 29-00 | பெண்பாடசாலை |
| வதிரி | 95-76 | 45-00 | 25-47 | |
| வவுனியா | 16-87 | 9-00 | 9-45 | |
| விடத்தல்தீவு | — | 6-00 | 11-19 | |
| அடம்பன் | 3-68 | — | 8-75 | ஆண்டான்குளப் பாடசாலை |
| | | | 12-00 | அடம்பன் ,, |
| | | | 7-85 | கருங்கண்டல் ,, |
| | | | 7-50 | நாவற்குளப் ,, |
| நல்லூர் | 18-50 | 37-50 | 22-00 | |
| தாழையடி | 3-50 | 7-50 | — | |
| மண்டைதீவு | 3-00 | — | — | |
| சந்தியோகுமையோர், இளவாலை | 20-48 | 3-00 | — | |

## திருப்பாலத்துவசபை

| | | | |
|---|---|---|---|
| அடைக்கலமாதா கோவில் | 60-00 | — | — |
| திருச்சிலுவைக்கன்னியர்கள் ஆஸ்பத்திரி | 50-00 | — | — |

—கிறுன்சசோஎனும் மலையில் தாம் பிடித்த கழுகுஒன்றைப் பறன் மரியோமரிம் பியெற்றினி பிரபு பரிசுத்தபாப்பாசருக்கு அன்பளிப்புச் செய்திருக்கின்றுர். இந்தக்கழுகு ஓர் பெரிய கூண்டிலே விடப்பெற்று வத்திக்கான் தோட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

—பரிசுத்த தேவதாயார் ஆத்தும சரீரத்துடன் பரலோகத்துக்கு ஆரோபணமானுரென்பது விசுவாசசத்தியமாகச் சென்றவருடம் பிரகடனஞ் செய்யப் பட்டதின் ஞாபகமாக அர்ச். பேதுருவானவர் மகாலயத்தின் உள் வாயிலிலே பரிசுத்தபாப்பாசர்சமீபத்தில் ஆறு சிலாசாசனங்களை ஆசீர்வதித்து ஸ்தாபித்திருக்கின்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

**1.** அர்ச். மத்தேயு ஓர்அப்போஸ்தலராகுமுன் என்ன தொழில் பார்த்துவந்தார்?

வரிப்பணம் அறவிடுவோராகத் தொழில்பார்த்துவந்தார்.

**2.** றோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாலயத்தில் எத்தனைபேர் ஒன்றுகூடலாம்?

60,000 பேர்வரையில் ஒன்றுகூடலாம். இது 700 அடிநீளமும், சிறகு மண்டபங்கள்வரையில் 450 அடி அகலமும் உள்ளது.

**3.** சுவிசேஷகர்கள் நால்வரினதும் சின்னங்கள் எவை?

அர்ச். மத்தேயு — ஓர்மனித தலை. அர்ச். லூக்கா — பலிஎருது. அர்ச். மாற்கு. — சிங்கம். அர்ச். அருளப்பர் —கழுகு.

**4.** அர்ச் சின்னப்பர் தமதுநிருபங்களிலே திவ்விய இஸ்பிரீத்துச்சாந்துவைப்பற்றி எத்தனைமுறை பேசுகின்றார்?

நூறுமுறைகளுக்குமேல் பேசுகின்றார்.

**5.** அமெரிக்க ஐக்கிய தேசத்திலே புறெட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பியவர்களாய் எத்தனைபேர் கத்தோலிக்கமேற்றிராணிமாராக வந்திருக்கின்றனர்?

பதின்மூன்றுபேர்.

**6.** வட-தேன் அமெரிக்காவில் எத்தனை ஐக்கியநாடுகள் இருக்கின்றன?

நான்கு. அவைாவன: (1) அமெரிக்க ஐக்கியநாடுகள். (2) மெக்சிக்க ஐக்கியநாடுகள். (3) வெனிசியூல ஐக்கியநாடுகள். (4) பிறேசில் ஐக்கியநாடுகள்.

**7.** அதிசம் சந்தானப்பெருக்கமுள்ள மீன்எது?

கொட்மீன் இனத்தைச்சேர்ந்த லிங் (Ling) என்பதே. இதுஒருமுறையில் மூன்றுகோடி முட்டைகள் இடுவதாய்க் கண்டறியப்பட்டிருக்கிறது.

**8.** சிலுவைஎன்பது ஓர்வேதுமானமா?

ஆம். சிலுவைஎன்பது தேவன் அருளும் ஓர்அரிய வெகுமானம் என்று கூரேதார்ஸ்என அறியப்படுகின்ற அர்ச். வியான்னி அருளப்பர்கூறுகிறார்.

**9.** திருச்சபைமுழுவதிலும் பரிசுத்தபாப்பரசர் வருடம்ஒன்றுக்கு எத்தனைமுறை பணத்தண்டல் செய்கின்றார்? அதன் நோக்கம் என்ன?

இரண்டுமுறை. முதலாவது—வேதவிசுவாசம் வேரூன்றி நன்குஸ்தாபகமாயிருக்கும் திருச்சபையின் தேவைகளுக்கென்று 'பேதுருவின்சல்லி'என அறியப்படுகிறஇது தைமாதம்1ந்-திகதி தண்டல்செய்யப்படுகிறது.

இரண்டாவது—மிஷன் நாடுகளிலே வேதம்போதிக்கப்படுகின்ற திருச்சபையின் தேவைகளுக்கென்று மிஷன் ஞாயிறன்று தண்டல் செய்யப்படுகின்றது.

**10.** குதிரைப்பலவேகம்(Horse Power) என்பது என்ன?

இது எஞ்சின்கள் வேலைசெய்யக்கூடிய பலத்தைஅளப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஓர்அளவை. ஒருகுதிரைப்பலம்என்பது 33,000 றுத்தல் பாரத்தை ஒருநிமிஷத்தில் ஒருஅடிக்கு உயர்த்தக்கூடிய பலம். இது மின்சாரஅலகுக் (Electrical writs) கணக்கில் 746 வாற்றுகளுக்குச் (Watts) சமமானது.

---

—திரு. வின்ஸ்றன் சேர்ச்சில்அவர்களைப் பிரதமராகக்கொண்ட பிரித்தானிய புதியமந்திரிசபையில் ஒரேயொருபெண்மணியே மந்திரியாக நியமனஞ்செய்யப்பட்டிருக்கின்றார். கல்வி மந்திரியாக நியமனஞ்செய்யப்பெற்றுள்ள இப்பெண்மணி செல்வி புளோறென்ஸ் ஹோர்க்ஸ்புறு என்பவரே.

## வன்னித்தபால்

(வன்னித்தூதன் வரைவது)

முதலியாகுளம்என்னும் அழகிய வன்னிக்கிராமமானது இன்றுஏனைய மாதோட்டக் கிராமங்களுக்கு ஓர் நல்லமாதிரியாக மறுமலர்ச்சிபெற்று மிளிர்கின்றதெனில் மிகையாகாது. கரடிபுலிவாழும் கானகங்கள், காடெங்கும் கமங்கள், காய்கனிதொங்கும் தோட்டங்கள், குளக்குன்றுகள், கத்தோலிக்க குடிமனைகள், இதிகாசங்கள்நிரம்பிய இந்து சமயச்சுற்றுடல் ஆதியவையெல்லாம் இவ்வன்னிக்கிராமத்தின் வர்ணனைகள். இத்தனை இயற்கைஎழில்தாங்கும் இக்கிராமம் இன்று சின்னமாதோட்டமெனச் சிறப்புப் பெயர்பெற்று வருகின்றது. காரணம் இதன் அண்மையிலுள்ள அயற்காடுகள் நாடாக்கப்பட்டுக் காத்தாங்குளப் புதியகுடியேற்றக் கிராமம் திறக்கப்பட்டமையும், மல்வத்தைஓயா என்ற ஆறு வளஞ்செய்வதுமேயாகும்.

**2. தண்ணீர்வசதி:** தாயைப்பழித்தாலும் தண்ணீரைப்பழிக்காத இக்கிராமமக்களுக்குத் தண்ணீர்த்தவிப்புக்கு இடமேயில்லை. வீட்டுக்கொரு கிணறு. முதலைகள்வாழுங் குளங்கள், தலையங்கத்திற்கேற்றதகுதியானமோட்டைகள்.

**3. கோவில்:** இக்கிராமம் வவுனியா விசாரணைப்பங்கைச் சேர்ந்தது. அர்ச். அந்தோனியாரின் ஆலயத்தைக் கொண்டது. ஊரவர்களின் உயிருள்ள வேதவிசுவாசமும், உணர்ச்சியான ஒற்றுமையும் அழகிய பலிபீடமொன்றை அமைப்பதற்குத் தற்போதுஅடிகோலிவிட்டது. வண. கட்டளைக்குரவர் வருடத்தில் பலதடவை சமுகம் கொடுத்துக் கிறீஸ்தவர்களின் ஆத்துமகருமங்களை விசாரணைசெய்துவருகின்றார்.

**4. கிராமமுன்னேற்றம்:** இக்கிராமம் வவுனியா வட்டாரப்பகுதிக்குட்பட்டது. கிராமமுன்னேற்றசங்கம் —சனசமூகநிலையம் என்பவைகளைக் கொண்டதாய் எல்லாவழிகளிலும் முன்னேறிவருகின்றது. ஆகாயவசனி (றேடியோ)மூலம் அனுதினமும் சங்கீதங்களையும், சமாச்சாரங்களையுங் கேட்டு ஆனந்திக்கின்றனர். ஒற்றுமை, உற்சாகம், ஒத்துழைப்புடன் சங்கங்களைவளர்க்கின்றனர் வாலிபர். விவசாயவிருத்தி, மிருகவளர்ப்பு, கோழிவளர்ப்பு, வாசிகசாலை, வைத்தியவசதி, தபால்வசதி, பிரயாணவசதி, காபந்துவிளையாட்டு என்பனவும் விருத்தியடைந்துவருகின்றன.

**5. குடிமனை:** மாதோட்டமக்களின் இல்லமென்றால் எஸ்கிமோவரின் இல்லமென்பதுதான் பலரின்எண்ணம். ஆனால், இக்கிராமமக்கள் குடிமனைகளைச் சுகாதாரமுறைகளிலே அமைப்பதில் அதிக சிரமம்எடுப்பது புகழத்தக்கது,

**6. கல்விவிருத்தி:** அழிந்துபோகும் நிலையில்இருந்த எம்பாடசாலையின்மட்டில் அனுதாபங்கொண்டு ஆறுமாதத்தின்முன்னர் அதனைத்தரிசித்துப் புதிய பாடசாலைக் கட்டிடத்திற்குப் போதிய உதவிசெய்து அத்திவாரக்கல் நாட்டிய எங்கள்அரியஆயர் மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கட்கு இக்கிராமமக்கள் மிகுந்த கடமைப்பட்டிருக்கின்றனர். இன்று அதன் வளர்ச்சிக்குக் காரணர், கட்டளைக்குரவர் வண. S. P. அல்பிறெட் சுவாமியவர்களே. இன்னும சமீபத்தில் (27-9-51) கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரர் அதிவண. T. A. J. மதுரநாயகம் சுவாமியவர்கள் எமதுபாடசாலையைத் தரிசித்து அனுதாபங்கொண்டதன் பயனாய் ஆங்கிலஆசிரியர் இல்லாதிருந்த இப்பாடசாலை இன்று ஆங்கிலஆசிரியருடன் இரண்டுஆசிரியர்கள் கடமையாற்றும்பாக்கியம் கிடைக்கப்பெற்றதென்பது பெருமைக்குரியதாகும். இன்னும் இப்பாடசாலைக்குத் தற்போதைய ஆசிரியர்கள் மனம்சலிக்காது செய்துவரும் ஆக்கவேலைகள் என்றும் மறக்கற்பாலனவன்று. ஈற்றில், எமது கோவிலும், பாடசாலையும், கிராமமும் இன்று அடைந்துவரும் பெருமையையும், புகழையும் உணர்ந்து யான் பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றேன்.

முதலியாகுள
முன்னேற்ற இளைஞன்

## திரு. J. V. வெல்டானோ, J. P.

பேசாலையைத் தமது ஜனனபதியாகக் கொண்டவரும், பரதசாகியத்தின் மணிவிளக்குகளில் ஒன்றாய் விளங்குபவரும் திரு. ஜேம்ஸ் வெல்டானோ அவர்களின் சிரேஷ்ட புதல்வருமான திரு. ஜே. வேதநாயகம் வெல்டானோ அவர்களின் உயரிய இலட்சியங்களையும், அவர் உவந்துஆற்றிய சனசமூக சேவைகளையும் அரசினர் பாராட்டி அவருக்கு ஜே. பி. என்னும் சமாதான நீதிபதிப்பட்டம் சன்மானித்துள்ளார் எனும்சந்தோஷசெய்தியானது தமிழ்ச் சாகியத்திற்கும், பரதசாகியத்திற்கும், பேசாலை மக்கட்கும் பெருமையளிக்கும் ஓர் சம்பவமாகும். இஃது பேசாலைச் சரித்திரத்திலே பொன்எழுத்துக்களால் பொறித்துவைக்கப்பட வேண்டியதுமாகும்.

ஜே. பி. பட்டம் சன்மானிக்கப்பெற்றுள்ள இவர் அகில இலங்கையிலும் பிரஸ்தாபமுற்றவர். மன்னார் மேற்குக் கிராமச்சங்க அங்கத்தவரிற் தலைசிறந்தவர். அகிலஇலங்கை மீன்பிடிச்சங்க ஆலோசனையாளருள் ஒருவர். பேசாலை வெற்றிநாயகி ஆலயக் கட்டளைகாரரில் ஒருவர். திடீர்மரண விசாரணை அதிகாரியாகக் கடமை பார்த்துவருகிறவர். நட்பும், தயையும், கொடையும் பிறவிக்குணமாய் அணைந்தவர். தேவபக்தி, சன்மார்க்க முறைகளின்வழி ஒழுகுபவர். ஒற்றுமையும், சமாதானமும்வேண்டி உழைப்பவர். ஏழைகள்பால் இரங்குபவர். பெருநிதியம் படைத்தவரெனினும் பெருமை அறியாதவர். சுருங்கக்கூறின் தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளர். அதனால் இப்பெருந்தகைக்கு ஜே. பி. பட்டம் முற்றிலும் தகுதியானது.

இவரின் விசுவாசப்பிரமாணவைபவம் இம்மதி 14-11-51 பி. ப 3 மணியளவில் மன்னார் நீதிபதிஅவர்கள்முன்னிலையில் உத்தியோகஸ்தர்களும், மற்றும்பிரமுகர்களும், பிறரும் குழுமிய சமூகத்திலே நிகழ்ந்தது. அத்தருணம் பெரியார் பலர் இவரின் நற்குணநற்செயல்களைவியந்து பாராட்டிப் பொன்மாலை, புகழ்மாலைகள்சூட்டிச் சோபன வாழ்த்துக் கூறிநின்றனர். பின்னர் ஜனனபதிமக்களால் இவர் பாண்டுவாத்திய வரிசைகளுடன் தம்மில்லத்துக்கழைத்துச் செல்லப்பெறவே, அங்கு இல்லுபசாரணை சிறப்பாகநடந்தேறியது. உபசாரணையின்போது அதிவண. மூப்புச்சுவாமிகளாலும், கட்டளைக்குரவராலும், ஆசிரியர் பலராலும் பொதுமக்கள் சார்பாய் வந்தனோபசாரவாழ்த்துகள் கூறப்பட்டுத் தேவாசி வேண்டிநிற்க வைபவம்முற்றுப்பெற்றது. சுபம்!

— நிருபர்

### பிரியாவிடை வைபவம்

கடந்த ஆறுஆண்டுகளாக ஊறணி அர்ச். அந்தோனியார்கோவிற் கட்டளைக்குரவராய் இருந்த வண. ஜே. அல்போன்ஸ்சுவாமியவர்கள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டிருப்பதை அறியவந்த அவ்வூர்வாசிகள் இம்மதி 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் அவருக்கு ஓர்பிரியாவிடைவிழா நிகழ்த்தினர். சுவாமியாரைக் குருமனையிலே, புதியகட்டளைக்குரவர் வண. ஜே. எவ். சேவியர்சுவாமியவர்கள் சமேதராய் உயராசனத்தில் அமரச்செய்து, பாடசாலைப்பாலியர் [illegible] பெரியோர் பூமாலை [illegible] பிரியாவிடைப் பத்திரத்தாலும், சொற்பொழிவுகளாலும் அவர்புகழைச்சாற்றி அன்பளிப்புச்செய்தனர். ஈற்றில், பிரியாவிடைநாயகர் நன்மதியும், நன்றியுரையுங்கூறி ஆசியருளியதும் பழை, அர்ச். ஸ்நாபகயுவானியார் கோவிற்கிறிஸ்தவர்களால் பிரதிமைப்படங்கள் பிடிக்கப்பட்டன. அதன்மேல் வாத்தியங்கள்இசைக்க, பாடசாலைப்பாலியர் கொடிகாத்தேந்தி முன்செல்ல, அலங்கரிக்கப்பெற்ற மோட்டார்ரதத்திலே அவரைவீதிவழியாய் அழைத்துச்சென்று காங்கேசன்துறை வெளிச்சவீட்டுச் சந்தியில் கடைசிஆசிபெற்றுப் பயணம்அனுப்பிவைக்க, விழா இனிதேமுற்றுப்பெற்றது.

— நிருபர்



### வதிரி
### சேவியர் சலோமைப்பிள்ளையின்
## 8-ம்வருட மரண ஞாபகம்

"சீவியத்தில் அவர்களை நாம் நேசித்தோம்."

நம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் அவர்களை இட்டுச்செல்லும்வரை நாம் அவர்களைக் கைவிடாதிருப்போமாக" (அர்ச். அம்புறோஸ்.)

இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசிகள், கன்னிகாஸ்திரிகளும், மற்றும்விசுவாசிகளும் அவவின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்வார்களாக.

கவனிப்பு:—இவவின் இளைப்பாற்றிக்காக 6-12-51 காலை துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப் பட்டது.

இவவைஇழந்து பிரலாபிக்கும் நேசபத்தா, மகள், தாய், சகோதரங்கள், மைத்துனர்.

#### விருத்தம்

மங்காத புகழ்நிலவு வதிரி தன்னில்
வயங்குமுயர் மரபதனில் வந்து பூத்துத்
துங்கமுறு மில்லறமாந் தேரைப் பூட்டிச் [வை
சுற்றத்தார் பாராட்டுந் தூய வாழ்
இங்கிதமாய் நடாத்திவந்த சலோமைப் பிள்ளை
எமைப்பிரிந்தே எட்டாண்டு ஏகினும் [வன்
பொங்குதுயர் போகவில்லைத் தேவ தே
பூம்பாதந் தஞ்சமெனப் போற்றினோமே

### இரட்டைப்பிள்ளைகளின் அதிசயம்

ஜனெற் பொன் ஹாம், ஜூலியே பொன் ஹாம்எனும் இரட்டைப் பிள்ளைகளைப்பற்றிய அதிசயசெய்திகளை அமெரிக்கசஞ்சிகை ஒன்று பின்வருமாறு எடுத்துக்கூறுகின்றது. இப்பெண்பிள்ளைகளில்ஒன்று காயமடையும்போது அன்றேல் புண்காணுமிடத்து அதற்குண்டாகும் அதேவேதனை மற்றதிலும் காணப்படுகிறது. 13 வயசுடைய ஜனெற்றுக்குப் பல்வலி காணுமிடத்து, அவள் சகோதரியான ஜூலியேயும் அதேஉபாதைப்படுகின்றாள். ஜனெற்றுக்குக் குழந்தைப்பிள்ளைவாதம் கண்டதுமுதல் கடந்த ஆறுவருடங்களாக இவ்விதமாக நிகழ்ந்துவருவதாய் அவர்களின் தாய் சொல்லுகின்றாள். சமீபத்திலேஜனெற் தனது கால்ஒன்றில் சத்திரவைத்தியம் செய்யப்பட்டாள். அப்போது பல மைல் தூரத்துக்கப்பால் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த ஜூலியே தனது காலில் ஏற்பட்ட உபாதையால் மூர்ச்சித்து விழுந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அன்பான தம்பி, தங்கச்சி!

ஆசா. யோசேவாஸ் முனிவர் பிறந்த மூன்றாம் நூற்றாண்டு நினைவுவிழா உங்கள் ஊரில் கொண்டாடப் பட்டதா? அவரைப் பற்றிப் பூசையிலே சுவாமியார் சொன்னது உங்கள் நினைவில் இருக்கிறதா? முனிவர்ஓர் இந்திய பிராமணர் என்று நீங்கள் அறிய வந்தபோது முதலில் நீங்கள் நம்ப வில்லையாம். இவர் எங்கள் நாட்டின் அப்போஸ்தலர் என்று இப்போது நீங்கள் நன்றாக விளங்கிக் கொண்டீர்கள் அல்லவா? அவருக்குத் திருச்சபையின் மகிமைப் பட்டம் விரைவில் கிடைக்கும் படியாய் அன்று நீங்கள் செபம் செய்தீர்களா?

"பூவாது பின்னிய மாலை அம்மா" என்ற பாட்டை நீங்கள் நன்றாய்ப் படித்தீர்களா? அந்த மாலை என்ன சொல்லுங்கள் பார்க்கலாம். நீங்கள் தினமும் செபமாலை சொல்லி வருகிறீர்களா? உங்கள் அப்பு, ஆச்சி எல்லாரும் அதை நாள்தோறும் சொல்லி வருகிறார்களா? அப்படி என்றால் மாதா உங்களில் நல்ல பட்சமாய் இருப்பா அல்லவா?

ஐந்து கடன் திருநாட்களிலே கடைசியான திருநாள் எது? தேவமாதா மாசில்லாமல் உற்பவித்த திருநாள் தான் என்று நீங்கள் அறிவீர்கள். அந்தத் திருநாள் இந்த மாதம் 8-ம் திகதி வருகிறது. இதன்கீழ் வரும் அமலோற்பவம் என்ற விஷயம் அது பற்றியே எழுதப் பட்டது. கவனமாகப் படியுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## அமலோற்பவம்

யேசுநாதர் பிறக்குமுன் மரியம்மாள் தன்பந்துவான எலிசபேத்தைச் சந்திக்கப் போனா. இருவரும் வந்தனஞ் சொன்னபின், மரியம்மாள் 'என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப் படுத்துகின்றது...' என்றவசனங்களைச் சொன்னா. அதில் "வல்லப முள்ளவர் மேன்மை யானவைகளை என்னிடத்தில் நிறைவேற்றினார்" என்றா. மாசில்லாத உற்பவம் அந்த "மேன்மையானவை"களில் ஒன்று.

மரியம்மாள் மாசில்லாமல் உற்பவித்தா என்றால் என்ன? இவ்வுலகில் ஒரு (மனுக்)குழந்தையாய் அவதரித்த பொழுது—உற்பத்தியான பொழுது, அவவுடைய ஆத்துமத்திலே பாவமாசு இருக்கவில்லை. அவவுடைய ஆத்துமம் இஷ்டப் பிரசாதம்நிறைந்ததாய் இருந்தது.

சர்வேசுரன் சர்வ வல்லபர். ஞானம் நிறைந்தவர். அவர் செய்வது எல்லாம் உத்தமமானது. முறையானது. கன்னி மரியம்மாள் உற்பவத்தில் பாவக்கறை இல்லாமல் இருக்கச் செய்யச் சர்வேசுரனால் முடியும். அப்படிச் செய்வது முப்போதும் தகுதியானது. ஆகையால் சர்வேசுரன் மரியம்மாள் மாசில்லாமல் உற்பவிக்கச் செய்தார்.

ஏவாள் சகலமனிதருக்கும்தாய். அவளைச் சர்வேசுரன் வரப்பிரசாத அந்தஸ்தில் உண்டாக்கினார். அப்படியானால் தேவதாயை ஏவாளிலும் குறைவான பரிசுத்த தனத்துடன் உண்டாக்குவது தகுதியாய் இருக்குமா? தேவசுதனான கிறிஸ்துநாதர் பரிபூரணர். பரிசுத்தர். மரியாயின் உதரக் கனியாகப் பிறக்க இருந்தவர். அவவுடைய எலும்புகளிலும், மாமிசத்திலும் இருந்து சரீரத்தை எடுத்தவர். அப்படியானால் பரிசுத்தமே உருவானவர், பாவக்கறைபட்ட ஒருவரிடத்தில் உதிப்பது அவருக்கே அவமான மாகும்.

கபிரியேல் அதிதூதன் மரியம்மாளுக்கு மங்களஞ் சொன்ன பொழுது "பிரிய பிரசாத பூரணி" என்று வாழ்த்தினார். ஏதேன் சிங்காரத் தோப்பிலே, "உனக்கும் ஸ்திரிக்கும் இடையில் பகையை உண்டாக்குவோம்...... அவள் உன் தலையை நசுக்குவாள்" என்று சர்வேசுரன் சொன்னதின் கருத்து, மரியாயின் மாசற்ற உற்பவத்தினாலேயே விளங்கும்.

இந்த வேத சத்தியம் திருச்சபையில் எப்பொழுதும் விசுவசிக்கப் பட்டு வந்தது. 1854-ம் ஆண்டு மார்கழி மாதம் 8-ந்திகதி 9-ம்பத்திநாதர் இது சகல விசுவாசிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டியது என்று சட்ட பூர்வமாகத் தெரிவித்தார். தேவமாதாவும் இதை ஆமோதிப்பதுபோல 1858-இல்லூர்து கெபியில் பெர்னதேத் என்னும் சிறுமிக்குக் காட்சி கொடுத்து "நாமே அமலோற்பவம்" என்று திருவாய் மலர்ந்தருளினா.

அமலோற்பவம் மரியாயின் சிறந்த மகிமை. தேவனிடம் பரிந்து பேச விசேஷ உரிமை கொடுக்கிறது. நாம் அவவைப் பின்பற்றிப் பரிசுத்தராய்ச் சீவித்தால் அவருடைய உதவியை அடைந்து கொள்ளலாம்.

## கழுதையின் சிந்தனைகள்

அந்நாட்களில் குடிசன மதிப்பு எடுக்கப் பட்டது. சூசையப்பர், கன்னி மரியம்மாளோடு தமது பெத்தலேகம் ஊருக்குப் போகப் புறப்பட்டார். அப்பொழுது கன்னி மரியம்மாள் பூரண கர்ப்பவதியாய் இருந்தாள். பாவம்! அவர்களுடைய நெடும் பயணத்துக்கு ஒருவண்டி வாகனமும் கிடைக்கவில்லை. ஒரு கழுதை தான் அகப்பட்டது. கன்னி மரியம்மாள் அதில் ஏறிக் கொண்டாள். அந்தக் கழுதையின் சிந்தனைகள் எவை?

1. கன்னியர் மாணிக்கம் அம்மா!—உம்மைக்
கண்ணாலே காணத் தவஞ் செய்தேன் நானே!
பொன்னின் மலர் போன்ற பூவை—தேவன்
பூமியில் கண்டவோர் ஞானப் புதையல்.

2. வாயைத் திறந் தொரு வார்த்தை—சொல்ல
வையகம் வந்திங்கு சேவைகள் செய்யும்
தூய பரலோகத் தூதர்—கோடி
தூக்கித் திரியாரோ ராக்கினி என்று

3. சின்ன விரலை அசைத்தால்—பல
தேசத் திருந்தும் பறவைகள் வந்து
வன்ன இறக்கையில் வைத்து—அந்த
வான வெளியிலே கொண்டு செல்லாதோ?

4. ஏழைக் கழுதை முதுகோ—உம்மை
ஏற்றித் திரியும் சிம்மாசனம் அம்மா!
தோழனும் மாதவச் சூசை—பூமிச்
சுகங்கள் வெறுத்தவன் சொற்படி தானோ?

—அழது

சம்பத்திரிசியார் கல்லூரி

### கீழ்ப்பாடசாலை 1952.

மேற்படி கல்லூரியின் கீழ்ப்பாடசாலையில் 1952-ம் ஆண்டு 5-ம் வகுப்பில் சேரவிருக்கும் பிள்ளைகள், 1951-ம் ஆண்டு மார்கழிமாதம் 1-ந் திகதி சனிக்கிழமை நடக்கவிருக்கும் பிரவேசப் பரீட்சையில் பங்குபற்றவேண்டும்.

1952-ம் ஆண்டு 4-ம் வகுப்பில் சேரவிருக்கும் பிள்ளைகள், 1952-ம் ஆண்டு தைமாதம் 12-ந் திகதி சனிக்கிழமை நடக்கவிருக்கும் பிரவேசப் பரீட்சையில் பங்குபற்றவேண்டும்.

இந்தப் பிரவேசப் பட்சைக்கு உரிய மற்றும் நிபந்தனைகளை அறிய விரும்புகிறவர்கள் கீழ்ப்பாடசாலையின் வண. தலைவர் சுவாமியாருக்கு நேரகாலத்துடன் மனுப்பண்ணி உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

1952-ம் ஆண்டின்

### மாதாந்தர ஷீட் காலண்டர்

உயர்ந்த வேலை! குறைந்த விலை! முந்துங்கள்!

இங்கிலிஷ்-தமிழ் தேதிகளுடன் முக்கிய திருநாட்கள்,
இந்து முஸ்லிம் புத்தமத பண்டிகைகளுடன்
பல வர்ணங்களில்
மகாவந். திரிகோணமலை மேற்றிராணிஆண்டவர் படத்துடன்
அச்சிடப்பட்டுள்ளது.

விலை ஒன்றுக்குச் சதம் 50 மட்டும்.

இனம்: ஒரு டசின் வாங்கினால் ஒரு காலண்டர் இனம்.
(தபாற் செலவு பிரத்தியேகம்.)

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—

**Rev. Fr. Superintendent,**
Catholic Orphanage Press,
Batticaloa.

## ஏமாந்தது யார்?

நாகரீக உலகில் நாம் எல்லாம் முன்னேறி விட்டோம். நம் வீட்டு முற்றத்தைச் சுற்றித் திரியும் காக்கையார் முன்னேறாமல் இருப்பாரா? காட்டிலே இருக்கும் நரிப்பிள்ளைக்கு நாகரீகத்தைப் பற்றி என்ன தெரியும்? இதன் உண்மையை இந்தக் கதையில் இருந்து அறிந்து கொள்ளுங்கள்.

"காகமும் வடையும்" என்ற கதையை நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள். அந்த ஏமாந்த காகம் இந்த ஏமாத்திய காகத்தின் பூட்டன். அந்தக் கதையைத் தான் இப்போது சொல்லப் போகிறேன்.

ஒரு நாள் ஓர்நாய் அப்பத் துண்டொன்றைத் தன் கால்களுக் கிடையில் வைத்துக் கொண்டு படுத்து இருந்தது. இதைக் கண்டு விட்டார் காக்கையார். அவருக்கு இருக்க முடியவில்லை. ஒரு கிளையில் இருந்து மற்றக் கிளைக்குப் பாய்ந்தார். கடுமையாக யோசித்தார். சட்டென ஒரு புத்தி தோன்றியதும் பறந்து வந்து நாயின் கோட்டை வாலைப் பிடித்து இழுத்தார். நாய்க்குக் கோபம் வந்து விட்டது. காக்கையாரைக் கலைத்தது. உடனே காக்கை மறு பக்கமாய்ச் சென்று அப்பத் துண்டை எடுத்துக் கொண்டு காடு நோக்கிப் பறந்தது. பாவம்! அந்த நாய் அண்ணாந்து பார்த்து "வள் வள்" என்று குலைத்தது.

காட்டிலே ஒரு மரக் கிளையில் உட்கார்ந்தார் காக்கையார். மரத்தடியில் படுத்திருந்த நரியார் இதைக்கண்டு விட்டார். அப்பத் துண்டைக் கண்டதும் அவருக்கு நாக்கில் சலம் ஊறிற்று. உடனே தன்னுடைய பழைய பல்லவியை ஆரம்பித்து விட்டார். "ஆகா! உன் அழகு என்ன! உன் பொன்னிறமான மேனியைக் கண்டு யார்தான் மயங்கார்? உனது பவளம் போன்ற சொண்டு எனக்கு இருந்தால் நான் மிருகங்களுக்கு எல்லாம் இராசாவாக இருப்பேன். ஓ! பட்சி இராசாவே! உன் பவள வாய் திறந்து ஒருமுறை பாடி விட்டால் என் பசி யெல்லாம் போய் விடும்" என்று அடுக்கிக் கொண்டே போனார் நரியார்.

உடனே காக்கையார் தன் வாயில் இருந்த அப்பத் துண்டை மரக் கிளையில் வைத்து ஒற்றைக் காலால் பிடித்துக் கொண்டு "உமது அன்பிற்கு நான் நன்றி சொல்லுகிறேன். எனக்கு நன்றாகப் பாடத் தெரியும். இப்போது பசியாக இருக்கிறது. இந்த அப்பத் துண்டைச் சாப்பிட்ட பின் பாடுகின்றேன்" என்று சொல்லி அதைச் சாப்பிட்டார். நரியார் நாக்கினால் நீர் ஒழுகப் பார்த்துக் கொண்டு இருந்தார். அவரால் மரத்தில் ஏற முடியவில்லை.

"எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்"
**உங்கள் பிள்ளைகள்**
கணித பாடத்திற் கெட்டிக்காரர் ஆகவேண்டுமா?
அவரவர் வகுப்புக்குரிய
**"படிமுறைக் கணிதத்தை"**
உடனேயே வாங்கிக் கொடுங்கள்
3-ஆம்வகுப்பு படிமுறைக் கணிதம் ரூபா 1-40.
4-ஆம்வகுப்புப் படிமுறைக்கணிதம் ரூபா 1-60.
5-ஆம்வகுப்புப் படிமுறைக்கணிதம் ரூபா 1-80.
(எல்லாப் புத்தக வியாபாரிகடளிடமும் கிடைக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்மும்பம் துன்பமும்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

அறுப்புக்காலத்தில் முந்தமுந்தத் தகரைகளைச் சேர்த்துக் கட்டிச் சுட்டெரிக்கும்படியும், கோதும்பைகளையோ வெனில் களஞ்சியத்திற் சேர்த்துவிடும்படியும் அறுப்புக்காரர்களுக்கு யான் திட்டஞ்செய்வேன்" என்றுசொன்னன்.

ஆண்டவர் திருவுளம்பற்றிய இந்தஉவமையின்படி, பொல்லாதவர்கள் இம்மாயப் பிரபஞ்ச வாழ்க்கையில் தகரைப்பயிர்களையொப்பச் செழித்தோங்கக் காணப்பட்டாலும், இறுதியில் அவர்களதுகதி அதோகதியே என்பதற்கு எட்டுணையுஞ்சந்தேகம்இல்லை. கொஞ்சத்தில் அழிந்துபடும் இம்மையின்வாழ்வையும், தாழ்வையும் பொருட்படுத்தாது, என்றுமழியாத மறுமைஇன்பத்தைநாடிஉழைப்பவர்க்கே அது சித்திக்குமென உணர்ந்து, அவ்வண்ணம் செய்தலே அறிவுடைமையாகுமன்றித் துன்பங்கண்டு அஞ்சுவது அறிவுடையார்க்கு அழகாகாது. "அழுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் ஆறுதல்அடைவார்கள்" என்ற எம்பிரானின் திருவாய்மொழியை நாம்பலகாலும்சிந்தித்து, நமக்கு வருந்துன்பத்தில் இன்பங்காணப் பிரயாசப்படுவோமாக.

### இளவரசர் மனந்திரும்பினுர்

அசாக்காஎனப்பெயரிய யப்பானியஇளவரசர் தமதுபுதல்வரோடும், மூத்தபுதல்வியோடும் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கத்தோலிக்கதிருமறையிற் சேர்ந்திருக்கின்றுர். யொக்கோஹாமாவின் மேற்றிராணியாரான வகிடா ஆண்டவர் ஞானஸ்நான திருச்சடங்கை நிறைவேற்றினர். யப்பானிய இராசகுடும்ப இரத்தத்தில் கத்தோலிக்கரான முதல்யப்பானிய இளவரசர்இவரே. இவரது ஞானஸ்நானப்பெயர் பீற்றர் என்பது. இவர்தேவியாரான இளவரசியும், இளையபுதல்வியும் சென்றவருடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். இளவரசி மனந்திரும்பியசம்பவம் சலேசியன்சபையாரால் வெளியிடப்பட்டுள்ளது.

### கருதினல்மார் திருச்சங்கம்

புதிய கருதினல்மாரை நியமனஞ்செய்வதற்காகப் பரிசுத்த பாப்பரசர் சமீபத்திலே கருதினல்மார் திருச்சங்கத்தைக்கூட்டுவாரெனச் செய்திபரந்திருக்கிறது. 70 பேர் இருக்கவேண்டிய கருதினல்மார் திருச்சங்கமானது தற்போது 49 கருதினல்மாரையே கொண்டிருக்கிறது. இவர்களிலும் 5 பேர் 75 வயதுக்கு மேற்பட்டவர்கள். அதிகம் விருத்தாப்பியரான கருதினல் வேர்தே ஆண்டவருக்குவயது 86. கருதினல் மேர்காற்றி, கருதினல் கார்க்கோஎனும் இருவருக்கும்வயது 85. கருதினல் ஜோறியோ 84 வயதும், கருதினல் வொன் போல்ஹாபர் 82 வயதும், கருதினல் சாவிபேக் 81 வயதும்உடையவர்கள். பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசரது ஆளுகைகாலத்தில் 44 கருதினல்மார் காலஞ்சென்றிருக்கிறார்கள்.

Mal. E. No. 512. Engels

### வங்கி நோட்டுகள் ஆபத்துக்கு இடமானவை

வங்கிநோட்டுகளிலே நோயணுக்கள் அபரிமிதமாய் இருப்பதையிட்டுப் பரீஸ்நகரிலே அதிகாரிகள் மனக்குழப்பம் அடைந்திருக்கிறுர்கள். ஐம்பதுபிராங் நோட்டுஒன்றிலே 50,000 நோயணுக்களும், ஐஞ்ஞூறுபிராங் நோட்டுஒன்று பாவனையிற் குறைந்ததாயினும் அதிலும் 40,000 நோய்க்கிருமிகளும் உறைந்திருக்கின்றன என்றும், ஆயிரம்பிராங்நோட்டு ஒன்று ஆயிரம்முறைக்குக்குறையப் பாவனையிலிருந்தாலும் அதிலுமே 25,000 நோய்க்கிருமிகள் பதிவிருக்கின்றன என்றும் நிபுணர்கள் கணித்திருக்கிறுர்கள்.

இந்தப்பிரச்சினை சுகாதாரசாஸ்திரிகளின் மனதைஈர்த்து வேலைசெய்திருக்கிறது. அத்துணைஅநேகமான நோய்க்கிருமிகளைக் கொண்டிராதனவும், கடுதாசிநாணயத்தைப்போலப் பொதுசன சுகாதாரத்துக்கு அவ்வளவுஅபாயம் உண்டுபண்ணுதனவுமான அதிகம் சிறியஇனமான நாணயங்களைப் பாவனைக்குள்ளாக்குவது மிகவும் விரும்பத்தக்கதென்று அவர்கள்கருதுகிறுர்கள்.

பரீஸ்நகரிலே ஓர்அமெரிக்கதுரைசாணி தங்கியிருக்கும்போது, இந்த நுண்ணியனவும், நோயை உண்டுபண்ணுவனவுமான கிருமிகளைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, அவ்வளவாகப் பயப்பிராந்தி கொண்டமையால் தனக்கென்று தடைநடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்தாள். ஒவ்வோர்சாயந்தரமும் வீட்டுக்குவரும்போது பகலிலே தான்பெற்றுக்கொண்ட வங்கிநோட்டுளதையும் பெற்ருேலில்கழுவித் தனது சன்னலுக்குவெளியே காயவைத்தாள். இதுமுற்றுமே சிறந்த ஓர் புத்திதான். ஆனல், பெரும்அளவிலே இதனை உலகம் சாதனையிற் கையாளுவது இலகுவன்று. பொதுசனசுகாதாரத்தை அச்சுறுத்துகின்ற இத்தகைய ஆபத்துக்களை எதிர்த்து மற்றும்கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியிருக்கின்றன.

உதாரணமாக, மலேரியாவை ஒருவர்தனித்துநின்று கட்டுப்படுத்தமுடியாது. நுளம்புகளை அப்பாலேகலைத்துவிடுமாறு ஒருவர்சிலவேளை சுங்கானைப் புகைக்கலாம். ஆனல், சாதனையிலே இரவும்பகலும்கையாளுவது இயலாக்கருமமாகும். கடைசியாக மலேரியாச்சுரங்களைத் தடுப்பதற்கென்று வைத்தியசாஸ்திரம் அத்துணைசிறந்த ஓர்மருந்தைக் கண்டுபிடித்திருக்கும்போது ஏன் அதைக் கையாளப்படாது.

அபாயகரமான மலேரியாக்கால முழுவதும் தினமும் 6 கிறேய்ன் குயினைனைப் பாவிப்பதாலே ஒருவர் இந்தக் கொள்ளைநோயினின்று தன்னைவெற்றிகரமாகத் தற்காத்துக்கொள்ளலாம். ஓர்கால் மலேரியா காணுமிடத்துத் திரும்பவும் குயினைனே சுகத்தைக் கொண்டுவருகின்றது. 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன்பாவிப்பது தப்பாத ஓர் மருந்தென்று முந்தியசர்வதேச சங்கத்தால் நியமிக்கப்பட்ட மலேரியா நிபுணர்களின் கம்மிற்றி 1938-ம்ஆண்டு விடுத்த அறிக்கையிலே சிபாரிசுசெய்திருக்கின்றது. அத்துடன் முன்சொன்ன தடைநடவடிக்கையும் அதேஅறிக்கையில் இந்தநிபுணர்களால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

முன்சொன்ன கம்மிஷன் அங்கத்தவர்களைப்போலும் பேர்பெற்ற நிபுணர்கள் அத்தகைய பிரச்சினைகள்மட்டிலே தங்கள்நேரத்தைச் செலவிட்டது தகுதியென்றுகாணும்போது பொதுசன சுகாதாரத்துக்குப் பெரிதும்அச்சுறுத்துதலான இந்த ஆபத்தைக் குறைவாக மதிக்கப்படாது என்பதை இதெல்லாம். மேலும் அத்தாட்சிப்படுத்துகிறது.

இதோ! இதோ!!

# நத்தார் விற்பனை

யாபேரும் கண்ணியப்படுத்தும்

## டைறம்ஸ் சாய்ப்பில்

நத்தார் ஜவுளி விற்பனை.

உள்ளம் குளிரச் செய்யும்

முதற்தரமான சேலைத் தினிசுகள்

பார்வைக்கு அழகான, மனநிறைவுக்கு ஏதுவான, கவர்ச்சிக்குரிய பண்டிகைக்கென்று வரவழைக்கப் பெற்ற புடவைகள் சகாயவிலை !!

உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து தெரிந்தெடுக்கப் பட்ட எல்லாத்தருணங்களுக்கும் பாவிக்கக்கூடிய விதம்விதமான பட்டுப்புடவைகள்.

இந்தியா தேசத்திலிருந்துவரும் தனிப் பட்டுப் புடவைகள் சோளி சட்டைக்கேற்ற துண்டுகள்.

பிள்ளைகளுக்கு உடுப்புக்கேற்ற விதம்விதமான சீட்டிகள், பட்டுகள், பாவாடைகள், மேற்சட்டைகளுக்குரிய புடவைகள்.

வீட்டைச் சிறப்பிக்கும் சொகுசைக்கொடுக்கும் படுக்கைச் சீலைகள்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை இழந்து போகவேண்டாம்.

## டைறம்ஸ்

சேலைகளுக்குப் பிரக்கியாதி பெற்றவர்கள்.

ஆயிரக்கணக்காக வெட்டுத் துணிகள் சகாயவிலையில் விற்பனைக்குண்டு.

### எடின்பரோ கோமகன்

வருகிறஆண்டின் மாசிமாதத்திலே பிரித்தானியஅரசரின் பட்டத்துக்குமாரத்தியான எலிசபேத்இளவரசியும், அவர்நாயகரான எடின்பரோவின் டியூக்கோமகனும் இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருப்பது எல்லோரும்அறிந்ததே. இளவரசியுடைய நாயகரின் நாமத்தைத்தாங்கிய மற்றோர் எடின்பரோவின் டியூக் கோமகனும் இற்றைக்கு 82 வருடங்களுக்குமுன் இலங்கைக்குவிஜயஞ்செய்ததும் இந்தவேளை ஞாபகத்துக்குவருகிறன்து. விக்ரோறியாமகாராணியாரின் இரண்டாவது புதல்வரான அல்பிறெட் இளவரசர் எடின்பரோவின் டியூக்கோமகனென அறியப்பெற்று 1869-ம்ஆண்டு இலங்கைக்கு விஜயஞ்செய்யலாயினர்.

### வைக்கோலிலிருந்து தளபாடம்

சுவிற்சர்லாந்திலே ஓர் கைத்தொழில் நிபுணரான எம். போல் ஹார்டர் என்பவர் வழமையான மரங்களிலிருந்து செய்யப்படுவனபோன்று காட்சியளிக்கின்ற வீட்டுத்தளபாடங்களை வைக்கோலிலும், காய்ந்தபுற்கற்றையிலுமிருந்து செய்யும் நவீன முறை ஒன்றைக் கண்டுபிடித்து வேலைசெய்யத் தொடங்கியிருக்கின்றுர். தேவைக்குதவாத அதாவது கழிவான பொருட்களிலிருந்து இவர் செய்யும் வீட்டுத்தளபாடங்கள் விலைபெற்றமரங்களிலிருந்து செய்யப்படும் சிறந்ததளபாடங்களை ஒத்தனவாய்ப் பெரிதும்அழகுற்றுவிளங்குகின்றன. இவற்றிலேசில வழமையில் ஏற்படுஞ்செலவில் பத்தில்ஒருபங்குடன் செய்து முடிக்கப்படுகின்றன. திரு. ஹார்டர்அவர்கள் பதினைந்துவருட ஆராய்ச்சியின் பின்னரே இந்தநவீன முறையைக் கண்டுபிடித்தார்.

### Ceylon Government Railway

LEVEL CROSSING REPAIRS

The following Level Crossings will be closed to vehicular traffic during the periods stated below for effecting repairs:—

(1) **The Level Crossing at 26 miles 29 chains 30 links (Railway mileage) on the Colombo—Galle Road between Kalutara North and Kalutara South Railway Stations, Coast Line.**

Totally closed from 10·0 p.m. on Sunday, 16-12-51 to 6·0 a.m. on Monday, 17-12-51.

During the period of closure the traffic could be diverted through Sirisumangala Road South and Sea Beach Road.

(2) **The Level Crossing at 13 miles 27 chains (Railway mileage) on the Colombo—Galle Road between Moratuwa and Egoda Uyana Stations, Coast Line.**

Partially closed from 8·0 p.m. to 10·0 p.m. on Sunday, 30-12-51. Traffic will be assisted over the Crossing.

Totally closed from 10·0 p.m. on Sunday, 30-12-51 to 6·0 a.m. on Monday 31-12-51.

During the period of total closure traffic could be diverted through Moratuwa Station Approach Road and the Level Crossing at Moratuwa to Uswatte.

—இரவிலே ஆகாயத்தில் எழுதி விளம்பரஞ்செய்யும் நவீன முறை ஒன்றை ஜேர்மனிய மின்சாரநிபுணர்கள் கண்டுபிடித்திருப்பதாகப் பிறுங்பேட்நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. பூமியிலிருந்து ஒளிக்கதிர்களை முகில்கள்மீதுசெலுத்தி அவர்கள் எழுத்துக்களை ஆகாயத்தில் எழுதுகின்றுர்கள். அவர்கள் கண்டுபிடித்துள்ள புதிய கருவி ஏழுமைல்உயரத்திலே சொற்களையும் படங்களையும் ஒளியால் வரைகின்றது.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 6 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org